பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 02 புதன்கிழமை (18-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:267

# புலிகளின் பகுதிக்குள் அரசபடைகளை அணிவகுத்து அனுப்புவாராம் ஜனாதிபதி!

## மிரட்டல் தொனியில் அவர் விடுக்கும் கடும் எச்சரிக்கை

கொழும்பு,ஓகஸ்ட்18

**"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உட்பகையால் எழுந்துள்ள சண்டை, நாட்டின் ஸ்திரநிலைக்கு ஆபத்தை ஏற்படுத்துமானால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அணிவகுத்துச் செல்லுமாறு துருப்புக்களுக்கு உத்தரவிடுவேன்." - இவ்வாறு கடுந்தொனியில் அமைந்த எச்சரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விடுத்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**



'யுனைட்டட் பிறஸ் இன்டர் நஷனல்' (யு.பி.ஐ.) என்ற செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ரவி ஆர்பிர சாத்துக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

"கிழக்கு நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரச துருப்புக்களை அங்கு அனுப்புவதே ஒரே வழி" - என்றும் அவர் இந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார்.

புலிகள் இயக்கத்திடையே பிளவு ஏற்பட்டதும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் சட்டம் ஒழுங்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதைப் பொறுப்பேற்பதற்கு அரசு முன்வந்தது என்றும் -

ஆனால், அந்த யோசனையை விடுதலைப் புலிகள் அமைப்பு நிராகரித்துவிட்டது என்றும் -

ஜனாதிபதி இந்தப் பேட்டியில் கூறியிருக்கின்றார். நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் செல்லுமானால் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்

(02ஆம் பக்கம் பார்க்க)

## இரு இலங்கையருக்குத் தூக்கு

இரு இலங்கையருக்கு குவைத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அட்துல் ஹீஸைன் மற்றம் சில்வஸ்டர் ஆகிய இருவருமே நேற்று தூக்கிலிடப்பட்டனர். மார்க்கண்டு ராஜா என்ற

(16ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியியற் கல்லூரியில் தொழிலாளர்கள் கைகலப்பு!

யாழ். தேசியக்கல்வியியற் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடத் தொகுதியில் வேலை செய்யும் கட்டடத் தொழிலாளர்களுக்கு இடையில் நேற்று இரவு பெரும் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

கட்டடத்தொழிலாளர்களுக்கான விடுதியில் தங்கியிருந்து பணியாற்றிய தொழிலாளர்களுக்கிடையே இந்த மோதல் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. இந்த மோதலில் காயமடைந்தவர்கள் என்று கூறப்படும் நால்வர் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆறுமுகம், சில்வெஸ்ரர்(வயது-21), பழனி ஆண்டி மோகனதாஸ் (வயது-20), மாரிமுத்து மனோகரன் (வயது-20), பாலித் (வயது-25) ஆகியோரே யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோராவர். இந்த மோதலில் மேலும் சிலரும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மோதல் சம்பவம் குறித்துக் கோப்பாய் பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து அங்குவந்த பொலீஸார் சிலரைக்கைது செய்து பொலீஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றனர்.

இந்த மோதலில் சம்பந்தப்பட்ட அனைவருமே வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4-9)

## மட்டுவிலில் ஒரு வீட்டிலிருந்து வெடிபொருள்கள் மீட்பு

சாவகச்சேரி,ஓக.18



மட்டுவில் பகுதியில் படையினரின் பாவனையிலிருந்து பின்னர் விடுவிக்கப்பட்ட வீடு ஒன்றினைத் துப்புரவு செய்தபோது அதற்குள்ளிருந்து பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. மட்டுவில் மகாவித்தியாலயத்துக்கு அருகில் நாகலிங்கம் நாகேந்திரம் என்பருக்குச் சொந்தமான வீட்டிற்குள் இருந்தே இந்த வெடிபொருள்கள் மீக்கப்பட்டன.

கடந்த 1996ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டுவரை இப்பகுதியில் படையினர் முகாமிட்டிருந்தனர். 2000ஆம் ஆண்டு படையினர் இங்கிருந்து வெளியேறினர். பின்னர் இக்காணி துப்புரவு செய்யப்படவில்லை. வீட்டுக்குள்ளும் வெளியிலும் பற்றைகள் மண்டிக்கிடந்தன. இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இக்காணியின் உரிமையாளர் தொழிலாளர்கள் சிலரைக்கொண்டு காணியைத் துப்புரவுசெய்தார்.

அப்போது வீட்டின் முன் அறை ஒன்றில் தகரத்தினால் மூடப்பட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## அருமை கல்விக்கூட விழாவில் தலைவர் பிரபா பங்கேற்பு

கிளிநொச்சி,ஓக.18

அருமை கல்விக் கூடத்தின் ஆண்டு நிறைவு விழா மற்றும் போராளிகளின் அறிவியற் கண்காட்சி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

வன்னியில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்த நிகழ்வில் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த போராளிகளுக்கும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் அவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். அருமை கல்விக் கூடப் பொறுப்பாளர் நாவலன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

இதில் 'முதற்பயணம்', 'எங்கள் மனக் கண்களைத் திறவுங்களேன்', 'அரசியல் புலனாய்வுக் கருத்துக்கள்' ஆகிய 3 நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

'முதற்பயணம்', 'அரசியல் புலனாய்வுக் கருத்துக்கள்' ஆகிய நூல்களை நாவலன் வழங்க தலைவர் பிரபாகரன் அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

போராளி ஆதித்த நிலா எழுதிய 'எங்கள் மனக்கண்களைத் திறவுங்களேன்' என்ற நூலை போராளி ஆனந்தி வழங்க தமிழீழத் தேசியத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவுக்கு புதிய தளபதி

வவுனியா மாவட்ட புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் பராமி குலத்துங்க எதிர் வரும் முதலாம் திகதி பதவி ஏற்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய இராணுவத் தலைமையகத்திற்கு இடமாற்றம் பெற்றுப் போகிறார். இதனையடுத்து மேஜர் ஜெனரல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ்மா அதிபருக்கு பதவிக் காலம் நீடிப்பு

இன்று பூர்த்தியாகவிருந்த பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலத்தை எதிர் வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதிவரை ஜனாதிபதி நீடித்திருக்கிறார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## பிரிவினையைத் தடுக்கும் ஒரே மாற்றீடு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைதான்

### அடித்துக்கூறுகின்றார் ஆயர் இராயப்பு ஜோசப்

இலங்கையில் பிரிவினைக்கு மாற்றீடாகப் பேசக்கூடிய ஒரே முன்மொழிவு யோசனை இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைதான். தற்போது கூறப்படும் அரசின் மாற்று இடைக்கால யோசனைகளைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசு நேரத்தைக் கடத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இந்த மாற்று யோசனைத் திட்டத்தைப் பயன்படுத்துகின்றது எனப் புலிகள் நினைக்கிறார்கள். இடைக்காலத் தனனாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சை மீண்டும் ஆரம்பித்தபின்னர் தனது யோசனைகளையும் அரசு அதில் சமர்ப்பிக்கட்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப்.

கடந்த ஞாயிறன்று காலை கிளிநொச்சி சென்ற ஆயர்கள் குழுவில் வண. இராயப்பு ஜோசப்பும் இடம்பெற்றிருந்தார். புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரை ஆயர்கள் சந்தித்துப் பேசியிருந்தனர். அதன் பின்னர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் மன்னார் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கையளிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம். அதனை எதிர்கொள்வற்கு முன்னாள் ஐக்கிய தேசிய முன்னணி அரசு தயாராக இருந்தது. அச்சமயத்தல்

(02ஆம் பக்கம் பார்க்க)


## ஆகக்கூடிய வட்டி!

இப்போது தேசிய சேமிப்பு வங்கி உங்களுடைய புதிய நிலையான வைப்புகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குகின்றது. அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைக்கு விரைந்து செல்லுங்கள்.

| தவணை வைப்புக்கள் | | வட்டி வீதம் (வருடத்துக்கு) | வ.வி.வ |
|---|---|---|---|
| நிலையான | 03 மாதங்கள் | 7.7% | 7.92% |
| வைப்பு | 06 மாதங்கள் | 7.8% | 7.95% |
| | 12 மாதங்கள் | 8.0% | 8.0% |
| | 24 மாதங்கள் | 8.4% | 8.07% |
| | 12 மாதங்கள் (மாதாந்தம்) | 7.75% | 8.03% |
| | *12 மாதங்கள் (மாதாந்தம்) ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு | 8.25% | 8.57% |
| *கௌரவ | | 9.75% | 10.20% |
| தேசிய சேமிப்பு சான்றிதழ் (3-48 மாதங்கள்) | | 7.75%-9.0% | 8.0% |

*விதிமுறைகளுக்கு அமைய

NSB





கொரியாவில் நடைபெற்ற உலக சமாதான மதங்களுக்கிடையிலான சர்வதேச தடகள விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு பதக்கம் வென்ற யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு வைபவம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

மங்கள விளக்கினை 'ரீல்கோ ஹொலிடேய்ஸ்' பிறைவேற் லிமிட்டெட் முகாமைப் பணிப்பாளர் த.திலகராஜ் ஏற்றுவதையும் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஒருவருக்கு வெற்றிச் சின்னத்தினை வழங்குவதையும் படத்தில் காணலாம். (படங்கள்: பிரபா)

# மதமாற்றத் தடுப்புச்சட்டத்தின் சில பிரிவுகள் அரசமைப்புக்கு உட்பட்டவையல்ல எனத் தீர்ப்பு!

## உயர்நீதிமன்றின் முடிவை சபாநாயகர் அறிவிப்பு

கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் அரசமைப்பிற்கு உட்பட்டதாக இருப்பினும், அதில் காணப்படும் உபபிரிவுகள் சிலவும், வாசகங்களும் அரசமைப்புக்கு முரணானவையாக உள்ளன. எனவே, இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் அது அங்கீகரிக்கப்படவேண்டும். மேலும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களால் அது அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

- இப்படி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

முதற்கட்டமாக, உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று சட்டவரைவுகள் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்களை சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

★ வாக்களிப்புக்குத் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம்.

★ வெளிநாட்டவர் காணிகளை வாங்கும் போது 100 வீதவரி அறவிடுவதற்கான நிதி திருத்தச் சட்டமூலம்.

ஆகிய இரு சட்டமூலங்களும் அரசமைப்பிற்கு ஏற்புடையனவாக இருக்கின்றன.

ஆனால், கட்டாய மதமாற்றச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்று குறிப்பிட்ட சபாநாயகர், மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களையும் சபையில் அறிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பி. ஒருவர் இந்தமதமாற்றத் தடுப்புச் சட்டத்தைத் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார் என்பது தெரிந்ததே.

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.18

அமரர் டாக்டர் பொன். மகாலிங்கம் ஞாபகார்த்தமாக வட அல்வை இளங்கோ மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இளங்கோ விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் மு.இராஜவரோதயன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் கலந்துகொள்வார். (ஒ-5)

★ ★ ★

காரைநகர் மற்றும் அராலி ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான வாழும் கலைப் பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை காலை 8மணிமுதல் நடைபெறவுள்ளது.

காரைநகர்ப் பிரதேச மாணவர்களுக்கான பயிற்சிகள் காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் எஸ்.சாந்தகுமாரினாலும் அராலிப் பகுதி மாணவர்களுக்கான பயிற்சிகள் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் திருமதி ஸ்ரீலதா பத்துசாமியாலும் வழங்கப்படவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஓக.18

தேசிய எழுச்சிப் பேரவையின் பண்டத்தரிப்பு வலயம் நடத்தும் வீரமுரசு நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக மேம்பாடு மற்றும் சமூக கலாசாரம் தொடர்பான நாடகங்களும் உள்ளூர்க் கலைஞர்கள் பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இதில் இடம்பெறவுள்ளன. (ஒ-135)

## பெற்றோலிய ஊழியர் பிரச்சினை குறித்து இன்று பேச்சு

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த முக்கிய பேச்சு இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது. அப்பேச்சு இன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று ஜனாதிபதியுடனும், எரிசக்தி, மின்வலு அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடனும் தாங்கள் நடத்தும் பேச்சுக்கள் வெற்றியளிக்காவிட்டால் முன்னறிவித்தலின்றி வேலை நிறுத்தத்தில் குதிப்போம் என்று தொழிற்சங்கச் செயலாளர் லஷ்மன் ஆனந்த முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.18

புன்னாலைக்கட்டுவன் வடகரு கடவத்தறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய புனராவர்த்தன பாலஸ்தாபன கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. கும்பாபிஷேகக் கிரியைகள் இம்மாதம் ஆரம்பமாகி நடைபெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.18

நாரந்தனை வடக்கு பண்டாரப்புலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (10-17)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஓக.18

வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 28ஆம் திகதி இரதோற்சவமும், 29ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஒ-135)

# வாக்களிப்புக்கு அடையாள அட்டையை கட்டாயப்படுத்தும் சட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,ஓக.18

வாக்களிப்புக்குத் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் தொடர்பான சர்ச்சைக்குரிய விவாதம் இன்று நாடாளுமன்றில் இடம்பெற்றது. இது தொடர்பாக எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அரசும் இணங்கி விட்டது.

நேற்றுக்காலை நாடாளுமன்றக் குழு அறையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இதற்கான இணக்கம் காணப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களின் வாக்களிப்பின்போது, வாக்காளர்கள் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தும் சட்டத்தை அரசு அவசர அவசரமாக நிறைவேற்றப் பல முயற்சிகளையும் மேற்கொண்டது.

இதற்கு ஏன் இவ்வளவு அவசரம் எனக் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சிகள், அதற்குக் கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று வற்புறுத்தின.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பான எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே முரட்டுத்தனமாக நடந்துகொண்டார் எனக் கூறப்பட்டது.

இதனை ஆட்சேபித்தே கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இருந்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் உண்மைநிலையை எடுத்துக்கூறினர்.

வடக்கு-கிழக்கிலும், மலையகத்திலும் சுமார் 33 வீதமானவர்கள் தேசிய அடையாள அட்டைகள் இன்றி இருக்கின்றனர். அவசரமாக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் 33 வீதமானவர்களும் வாக்களிக்கமுடியாமல் தடுக்கப்படுவர்.

எனவே, முதல் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதன்பின் அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் தேர்தல் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரலாம். அதற்கு ஆட்சேபனை இல்லை என எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாகக் கூறிவிட்டன.

இதனை ஆளும் கட்சியினரும் ஒத்துக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. இதனால், இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருந்த தேர்தல்கள் திருத்தச்சட்டம் தொடர்பான விவாதம் காலவரையறையின்றிப் பின்போடப்பட்டது. (க)

## கூட்டம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவகாலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் முக்கிய கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பி.ப. 3மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் நல்லூர் உற்சவகாலத்தில் சேவையாற்றவுள்ள தொண்டு நிறுவனங்கள், போக்குவரத்துச் சபை, சுகாதார சேவை, முதலுதவிப் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பொலீஸாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-13)

## முல்லைத்தீவு மாணவனுக்கு 3'ஏ'

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மாணவனான தனபாலசிங்கம் அருள்பிரசாத் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் 3 'ஏ' பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (8-341)

# பிரிவினையைத் தடுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் மூன்று அமைச்சுக்களைப் பறித்துக் கொண்ட ஜனாதிபதி, முடிவில் நாடாளுமன்றத்தையே கலைத்தார். இந்தச் சூழ்நிலை சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் குறித்த குழப்பத்தை உலக நாடுகளுக்கு ஏற்படுத்தியது" - என்றார் அவர்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக் குறித்து அவர் விளக்கினார். விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் எந்தச் சமாதானப் பேச்சையும் ஜே.வி.பி. எதிர்க்கும் என்று தமிழ்ச்செல்வன் கருதுகின்றார் என்றும் அவர் சொன்னார்.

அளவுக்கு மீறிய நாட்டுப் பற்றாளர்களாகக் காணப்படும் ஜே.வி.பியினரின் நிலைப்பாட்டையும் பொருட்படுத்தாமல் ஜனாதிபதி குமாரதுங்க அவர்களுடன் கூட்டுச்சேர்ந்துள்ளார் என்று தமிழ்ச்செல்வன் தர்க்கப்பட்டார். இது, புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் ஊடாகத் தீர்வை எட்டும ஜனாதிபதியின் நிலை தொடர்பாகச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் அவர் கூறினார்.

"புறக்கணிக்கக்கூடிய அளவு சிறுபானமையானோரே தெற்கில் சமாதானத்துக்கு எதிராக இருககின்றனர் எனத் தாம் நம்புகின்றார் என்றும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்" - இப்படி ஆயர் மேலும் சொன்னார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளைச் சர்வதேச சமூகம் வரவேற்றுள்ளது. ஐ.தே.முன்னணி அரசுகூட அந்த யோசனைகளைப் பேச்சுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதியது என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார் - என்றார் ஆயர்.

ஜனாதிபதி குமாரதுங்கவின் முரண்பாடான நிலைப்பாடுகள் மற்றும் அறிக்கைகளால் நோர்வேயினரே தெளிவற்ற நிலைமை இருப்பதாக அறிவித்துவிட்டனர் என்று தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார் என்றும் ஆயர் கூறினார். ஜனாதிபதி தனது நிலைப்பாட்டில் தெளிவாக இருக்க வேண்டும். முரண்பட்ட நிலைப்பாடுகளை அவர் கொண்டுள்ளார் என்பதை நோர்வேயே அவருககுச் சுட்டிக்காட்டியுள்ளது.

புலிகள் அமைப்பில் இருந்து விரட்டப்பட்ட கருணாவின் விவகாரம் சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்காது எனவும் தமிழ்ச்செல்வன் ஆயரிடம் கூறியுள்ளார். உள்முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அது ஒரு தவிர்க்கமுடியாத நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் அபாயமான கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்பதை ஆயர்களிடம் சுட்டிக்காட்டவும் தமிழ்ச்செல்வன் தவறவில்லை. சமய மற்றும சீவில் சமூகத தலைவர்கள் சமாதான முயற்சிகளுக்காக உதவவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# புலிகளின் பகுதிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் திடமுடன் கூறினார்.

"நாட்டின் தலைவி என்ற முறையில் தேசிய நலனுக்காகச் செய்யவேண்டியதைச் செய்வதற்கு என்றும் நான் பின்னடித்ததேயில்லை" - என்றார் அவர்.

"இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களின் மூலம மக்கள் என்னிடம் பொறுப்பளித்த - ஒப்புவித்த - கடமைகளையும், பொறுப்புக்களையும், என்னுடைய உயிரைப் பணயம் வைத்து, என்னால் இயன்றளவு திறமையுடன், நான் செய்துவந்துள்ளேன். தேசிய நலனுக்கு ஒன்று உகந்தது என்று எமக்குப்பட்டால் அதை நிறைவேற்றுவதற்கு நாம் பின்நிற்கமாட்டோம்" - என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புலிகளுக்கு நமது அரசு ஏழு அல்லது எட்டு வெவ்வேறு நகல் யோசனைகளை அனுப்பியுள்ளது என்றும், ஆனால், புலிகள் இயக்கம் அவற்றுக்கெல்லாம் பதிலளிக்கத் தவறிவிட்டது என்றும் ஜனாதிபதி குமாரதுங்க இப்பேட்டியில் கூறினார்.

புலிகளின் தலைமை கிழக்கில் அவர்களது இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவு குறித்த விடயத்தில் மூழ்கியுள்ளது போலும் என்றும் அவர் சொன்னார்.

"பேச்சுக்கு வர முன்னர் கிழக்கு நிலைமையை ஸ்திரப்படுத்துவது புலிகளின் தற்போதைய தலைமையின் முக்கிய சிரத்தையாக இருக்கும்போல் தென்படுகின்றது. நிகழ்ச்சி நிரல அவர்களுக்கு முக்கிய விடயம் இல்லைப்போல எங்களுக்குத் தோற்றுகின்றது" - என்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

"இடைக்கால நிர்வாக விடயத்தில் நாங்கள் 75 வீதம் சென்றுள்ளோம். மிகுதி 25 வீதம் வருவதற்கு புலிகள் இணங்குகின்றார்கள் இல்லை" - என்று குறைபட்டார் அவர்.

இடைக்கால நிர்வாகத்தை அனுமதிக்க இணங்கும் என்பதை அரசு புலிகளுக்கு கோடிகாட்டியிருப்பதாக ஜனாதிபதி சொன்னார்.

நாங்கள் அமர்ந்து இறுதித் தீர்வுகுறித்து பேசவேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தினார்.

"ஆனால், அதற்குப் புலிகள் 'இல்லை' என்று மறுக்கிறார்கள். தாங்கள் இறுதித்தீர்வு குறித்துப் பேசத் தயாரில்லை என்றும், இடைக்காலத் தீர்வு குறித்தே பேசலாம் என்றும் தெரிவிக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசுங்கள். கையெழுத்திடுங்கள். அதை அமையுங்கள். அமைத்து முடித்த பின்னர், அது செயற்படத் தொடங்கியதும் இறுதித்தீர்வு குறித்துப் பேசத் தொடங்கலாம் - என்று புலிகள் கூறுகிறார்கள். அப்படியான விடயத்துக்கு ஏதாவது ஓர் அரசு இணங்குமானால் அது பெரிய 'ஜோக்' ஆகத்தான் இருக்கும் என்று நாங்கள் அவர்களுக்குக் கூறியுள்ளோம் - என்றும் ஜனாதிபதி குமாரதுங்க இப்பேட்டியில் கூறியிருக்கின்றார்.

உதயன்

# அச்சுறுத்தல் பேச்சால் அமைதிக்குப் பங்கம்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு காண்பதற்கான முயற்சிகள் புதிய போக்கில் திரும்பிவிட்டன போலத் தென்படுகின்றன. இணக்கத் தீர்வுக்கான வாய்ப்புகள் அருகி, விவகாரம் பிணக்கு வழியில் நழுவத் தொடங்கிவிட்டது போலத் தோற்றுகின்றது.

எதிரும் புதிருமான கருத்துடைய இரு தரப்புகள் - ஆயுத வழியில் தமக்குள் பெருஞ்சமர் புரிந்துமோதிக் கொண்ட எதிரெதிர் அணிகள் - பேச்சு மேசையில் தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்குச் சில வழிமுறைகள் உள்ளன. பரஸ்பரம் இரு தரப்பினரும் கைக்கொள்ளவேண்டிய - பின்பற்றவேண்டிய - நடைமுறை மார்க்கங்கள் உள்ளன. அவற்றைத் துறந்தால் அமைதி வழித் தீர்வு அசாத்தியமாகிவிடும்.

பேச்சு மேசைக்கு வரும் அணிகள் ஒரு தரப்பை மறுதரப்புக் குறைகூறலாம்; குற்றஞ்சாட்டலாம்; கண்டிக்கலாம்; அபகீர்த்தி ஏற்படுத்தலாம்; ஏன் அவமானப்படுத்தக் கூடச் செய்யலாம். அவை பேச்சு மேசையில் அதிகம் ஈட்டிக் கொள்வதற்கான தந்திரோபாயமாகக் கூட அமையலாம்.

ஆனால், அச்சுறுத்தக்கூடாது. மிரட்டி அடக்க எத்தனிக்கக்கூடாது. அதையும் கூட பகிரங்கமாகச் செய்ய முற்பட்டால் அமைதிப் பேச்சு - சமாதான நடவடிக்கை - இணக்கத்துக்கான எத்தனம் - சமரச முயற்சி - என்பனவெல்லாம் கேலிக்கூத்தாகிவிடும்.

சமாதான நடவடிக்கை வேளையில் - ஒரு தரப்பு, மறுதரப்பை நோக்கி பகிரங்கமாக விடுக்கும் அச்சுறுத்தல் - மிரட்டல் - சாதாரண விவகாரமாக எடுத்துக்கொள்ளக்கூடியதல்ல. சமாதான நடவடிக்கைகளின் ஆணிவேரையே - அத்திவாரத்தையே - தகர்க்கும் செயலாகத்தான் அது முடியும்.

அப்படி ஓர் எச்சரிக்கையைத்தான் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாணும் முயற்சியில் தனது அரசுக்கு எதிர்த்தரப்பில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு விடுத்திருக்கின்றார்.

ஒரு நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய மிடுக்கும், மமதையும் அவரது தொனியில் இருந்தாலும், சமாதான முயற்சிகளின் ஒரு தரப்பிலிருந்து கொண்டு மறுதரப்பை நோக்கி விடுக்கப்பட்ட மோசமான அச்சுறுத்தலாகவே அது கருதப்பட வேண்டியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் தனது படைகளை அணிவகுத்துச் செல்வதற்கு உத்தரவிடத்தான் தயார் என்று அவர் திட்டவட்டமாக அறிவித்திருப்பது அமைதி முயற்சிகளுக்கு விழுந்த பெரிய அடியாகவே கருதப்படவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே வழி அங்கு புலிகளின் பிரதேசத்துக்கு அரசுத் துருப்புகளை அனுப்புவதுதான் எனவும் அவர் முழங்கியிருக்கின்றார்.

1994இல் முதல் தடவையாக அவர் ஜனாதிபதியாக வந்ததும், ஒருபுறம் சமாதான முயற்சியை முன்னெடுத்துக் கொண்டு மறுபுறம் வடக்கின் மீது கண்வைத்தார்; பெரும் போர் வெடித்தது. யாழ். குடாநாட்டை அவரது படைகள் கைப்பற்றின.

இப்போது மீண்டும் அடுத்த சமாதான முயற்சிக் காலத்தில் அவர் கிழக்கில் கண்வைக்கிறார். அதைக் கைப்பற்றுவதற்கு இந்தச் சமாதான காலத்தில் அவர் வசமாகப் பயன்படுத்த முயல்கிறார் என்று இப்பத்தியல் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். அவரது அந்தக் குள்ளநரித் திட்டத்தின் அவா, இப்போது அவரது வாய் மூலமே வெளிப்பட்டிருக்கின்றது.

ஆனால், வரலாற்றுச் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதில்லை. 1994 - 95 சரித்திரம் இப்போதும் சாத்தியமாகும் என்ற நப்பாசையில் திளைக்கிறார் போலும் ஜனாதிபதி.

அமைதி வழியில் தீர்வுகாண்பதற்கு ஒத்துவராத - ஒப்புக்கொள்ளமாட்டாத - பேரினவாதிகளை அணி சேர்த்து, அவர்களின் தயவிலும், பலத்திலும் ஆட்சியைத் தட்டுத்தடுமாறி, தக்கவைத்திருக்கும் ஜனாதிபதி, அந்தக் கூடாத கூட்டத்தின் கூட்டில் தங்கியிருப்பதால் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க முடியாதவராக இருக்கின்றார் என்பது தெளிவு.

இதனால், இவ்விவகாரத்தில் - அமைதித் தீர்வு காணத் தவறும் விடயத்தில் - குற்றச்சாட்டு தம்மீது சுமத்தப்படுவதற்கு முன்னரே நிலைமையைப் போட்டுடைத்து அக்குற்றச்சாட்டை தம்மீது வராமல் தவிர்த்துக்கொள்ள எத்தனிக்கிறார்.

அமைதித் தீர்வுகாணும் நடவடிக்கைகளுக்கான வாய்ப்பும், சூழ்நிலையும் நீடித்தால்தானே, தீர்வுகாண முயற்சி எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வரும். எனவே, அத்தகைய சூழ்நிலை நீடிக்காமல் பண்ணிவிட்டால் அந்தக் குற்றச்சாட்டும் எழாது; சிக்கலும் வராது.

அதனால், அமைதிச் சூழ்நிலைக்கு வேட்டுவைக்கும் ஆக்ரோஷப் போக்கை வெளிப்படுத்துகின்றார் ஜனாதிபதி.

இந்த வெற்றுவேட்டு வாய்முழக்கம் சிங்களப் பேரினவாதிகள், தீவிர இனவாதிகள் போன்றோர் முன்னிலையில் தமக்கு 'அப்ளாஸ்' வேண்டித்தரும் என்பதும் அவருக்குத் தெரியும். எனவேதான், 'ஒரே கல்லில் பல மாங்காய்கள்' என்ற எண்ணத்தில் திமிர் முழக்கம் செய்ய முற்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி.

# குருநகர் மக்களுக்கு அல்லைப்பிட்டியில் குடியேற்றத் திட்டம் அமைக்க ஏற்பாடு

குருநகர்,ஓக.18

குருநகர் மக்களுக்கான குடியேற்றத் திட்டமொன்றை அல்லைப்பிட்டியில் அமைப்பதற்கான வழிமுறைகள் பற்றிய தரவுகள் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைப்பின் செயலாளர் ம.குயின்ரன் தெரிவித்தார்.

குருநகரிலுள்ள பெரும்பாலான வீடுகள் வசதியற்றவையாகவுள்ளதுடன், இந்த வீடுகள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதனால், பல சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் நோய்களும் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெருகி வரும் சனத்தொகைக்கேற்ப வீடுகள் அமைப்பதற்கு குருநகர் பகுதியில் இட வசதிகள் இல்லாமலுள்ளன.

எனவே, அரச அதிபரின் உதவியுடன அல்லைப்பிட்டியில் குருநகர் மக்களுககு காணி பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்த முன்னணி குருநகரிலுள்ள குடியிருப்பாளர்களது வீடுகளுக்குச் சென்று குடும்ப விவரம், குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, பிள்ளைகள் விவரம், தொழில் மற்றும் ஊதியம் ஆகியவைகளைத் தனித்தனியாகப் பதிவு செய்வதுடன், அல்லைப்பிட்டியில் குடியமர்வதற்கான குடியிருப்பாளர்களின் விருப்பத்தையும் கேட்டுப் பதிவு செய்து வருகின்றது.

(10-51)

# உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே வரைதல், கட்டுரைப் போட்டி

## வீடமைப்பு அதிகாரசபை நடத்துகிறது

உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே வரைதல் மற்றும் கட்டுரைப் போட்டிகளைத் தேசிய வீடமைப்பு அதிகாரசபை நடத்தவுள்ளது.

ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தையொட்டி வீடமைப்பு நிர்மாணக் கைத்தொழில் கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அனுசரணையுடன் தேசிய வீடமைப்பு அதிகாரசபை இப்போட்டிகளை நடத்தவுள்ளது.

"கிராமிய பொருளாதாரத்தை பலமடைச் செய்வதற்காக நகரங்களிலிருந்து கிடைக்கவேண்டிய உந்து சக்தியும் நகரங்களின் நிரந்தர அபிவிருத்திக்கு கிராமங்களிலிருந்து கிடைக்கவேண்டிய பங்களிப்பும் என்ற தொனிப்பொருளில் போட்டிக்கான ஆக்கங்கள் அமைந்திருத்தல் வேண்டும் எனவும், அரச, தனியார் பாடசாலைகளில் தரம் 5 முதல் தரம் 13 வரை கல்விபயிலும் மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

போட்டியில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு முதலாம் பரிசாக 10ஆயிரம் ரூபாவும், 2ஆம் பரிசாக 7ஆயிரத்து 500 ரூபாவும், 3ஆம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும், 2ஆயிரம் ரூபா பெறுமதியான 5திறமைக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டுவோரிற்கான பரிசளிப்பு உலக குடியிருப்பு தினமான ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள விசேட விழாவின்போது இடம்பெறும்.

போட்டிக்கான ஆக்கங்களை பாடசாலை அதிபரின் சிபார்சுடன் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் மற்றும் பிரசாரம்) தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு, 4ஆவது மாடி, தேசிய வீடமைப்பு அதிகாரசபை, சேர் சிற்றம்பலம் ஏ.காடினர் மாவத்தை, கொழும்பு - 2 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி சம்பந்தமான மேலதிக விவரங்களை தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

(8-7)

# சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் பாதீனியத்தை அழிப்பதற்கு நடவடிக்கை

வலி.மேற்கு,ஓக.18

சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் காணப்படும் ப்ரதீனியம் களைகளை அழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சங்கானை மண்டிகைக்குளத்துக்கு அருகிலும், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகிலும் காணப்படும் பாதீனியம் காலத்துக்குக்காலம் அழிக்கப்பட்டபோதும் மீண்டும் அவ்விடங்களில் காணப்படுகின்றது.

இவற்றை முழுமையாக அழிப்பதற்கு இப்பகுதிக் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து நடவடிக்கை எடுப்பதென அண்மையில் நடைபெற்ற வலி.மேற்குப் பிரதேச விவசாயக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் பிரதேசசெயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கிராம அலுவலர்கள், தொல்புரம் கமநலசேவை நிலையத்தின் அதிகாரிகள், கால்நடை வைத்திய அதிகாரி, மீன்பிடிப் பரிசோதகர், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

★ பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளதனால் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் இருந்து மூளாய், சுழிபுரம், பொன்னாலை ஆகிய வயல் நிலங்களுக்கு வருகின்ற கட்டாக்காலி மாடுகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு வேலி அமைக்கப்படவேண்டும். கடந்த வருடங்களைப் போல கடற்படையினருடன் தொடர்புகொண்டு வேலியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

★ சங்கரத்தை திக்கராய்க்குளத்தில் இருந்து பெருமளவில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மண் அகழ்வைத் தடைசெய்ய வேண்டும்.

★ வட்டுக்கோட்டைப்பகுதி விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் இம்மாதம் முடிவடைவதற்குள் கூட்டப்பட்டு வரவு - செலவு கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(10-175)

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.18

வடக்கு - கிழக்கு மாகாண துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடிசார் துறைகளான கட்டட நிர்மாணம், பாலம் அமைத்தல் பெருந்தெருக்கள் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9மணி முதல் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சிவில், கணிய அளவீடு, படவரைஞர், கட்டட நிர்மாணத் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றில் சித்தியடைந்தவர்கள் அனைவரையும் தமது தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் கேட்டுள்ளார்.

(10-5)

# யாழ்.பல்கலைக்கழக சட்டமாணி கற்கைநெறிக்கு 50 மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ள சட்டமாணிக் கற்கை நெறிக்கு முதற்கட்டமாக 50மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதாகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழகம் செல்ல அனுமதி பெற்ற அனைத்துத் துறை மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலப்பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் விண்ணப்பப் படிவத்தில் (First form) இதுபற்றிக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடுத்தவருடம் முதல் யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் ஒன்றை அமைப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிதி வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாகவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்துள்ளார்.

(10-13-201)

## நாளை

ஆவணி 3
வியாழக்கிழமை
(19.08.2004)
திதி : திருதியை
முற்பகல் 8.14
நட்சத்திரம் : உத்தரம்
முற்பகல் 11.31
சுபநேரம்: 7.35 - 9.05
ராகுகாலம்: 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

# இரவுவேளைகளில் செல்வோர் மீது மறைந்திருந்து தாக்கும் கும்பல்!

கைதடி,ஓக.18

இரவு வேளைகளில் தனியாகச் செல்வோர் மீது மறைந்திருந்து தாக்கும் கும்பல் ஒன்று கைதடிப் பகுதியில் தற்போது உலவிவருவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கும்பல் இரவு வேளையில் அங்குள்ள ஒழுங்கைகளில் மறைந்திருந்து கொண்டு அப்பகுதியால் தனியாக வருவோரின் முகத்தில் 'ரோச்' வெளிச்சத்தை பாய்ச்சி விட்டுத் திடீரென முகத்தின் மீது தாக்குவதோடு அவர்களின் உடைமைகளையும் சேதப்படுத்திவிட்டு தலைமறைவாகுவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரமும் இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இவ்வாறு தாக்கப்பட்டதோடு அவரது சைக்கிளும் அடித்து நொறுக்கப்பட்டது. தற்போது வீதிகளில் இரவு வேளைகளில் தனியாகப் பயணம் செய்யப் பொதுமக்கள் பெரிதும் அச்சம் கொள்கின்றார்கள்.

இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும் முறைப்பாடு செய்துள்ளனர்.

(10-75)

## உதயவாக்கு

புகழ்ச்சியும் இகழ்ச்சியும் யாரின் உள்ளத்தில் ஒரே தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவோ அவனிடம்தான் பண்பாடுகள் பூரணமடையும்.

Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6359434 முதல் 6371986 வரை
சீட்டிழுப்பு இல. 59 திகதி 16-08-2004

வெற்றி எண்கள் **0 9 6 0 4 2** சுப்பர் எண் **13**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,54,04,125/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,54,04,125/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 5,45,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,096 | 500/- | 5,48,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,909 | 50/- | 5,45,450/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,08,129 | 10/- | 10,81,290/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,093 | 100/- | 1,09,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,816 | 20/- | 2,16,320/- |
| மொத்தம் | 1,32,286 | | 57,11,360/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 57,11,360/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,57,07,525/-**

தொடர் இல. 7332495 க்கு மேற்பட்ட டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் ... 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**6361148-6-61**
**6363567-4-76**
**6368325-0-57**
**6369061-8-76**
**6360286-9-98**


## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

ஏழாலை,ஓக.18

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 15 நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பத்மகுமார் தலைமையில் வலி. தெற்குப் பிரதேச சபை சுகாதார ஊழியர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகச் சுன்னாகம் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (8-45)


**ஈசன் கல்வி நிலையம்**
A/L 2005 DAY CLASS
கலைப் பிரிவு

ECO.: திரு.உதயன்
TAM.: திரு.குழந்தை
HIN.: திரு.சுரேஸ்
LOG.: திரு. S.S.மனோகரன்
DRA.: திரு.சந்திரன்
GEO.: திரு.சங்கர்

ஆரம்பம்:19.08.2004
THU:7.00 a.m. (S.I.T.)
(35240)(42-15-112)


## கண்ணீர் அஞ்சலி

எமது உதவி அரசாங்க அதிபர்
**செல்வி பிரபா கந்தசாமி ஐயர்** அவர்களின் அன்புச் சகோதரர்
**கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர்**
அவர்களின் திடீர் மறைவையிட்டு துயரத்தில் மூழ்கியிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் தாய், சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்.* (35388)(32-18-13) **நலன்புரிச் சங்கம்.**

# மரண அறிவித்தல்கள்

### தம்பு கந்தையா

(மர அரிவு ஆலை உரிமையாளர்)



வட்டு. தெற்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தையா நேற்று (17.08.2004) செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் கருணாகரன் (சுவிஸ்), காந்தன் (சுவிஸ்), சறோஜினி (திருகோணமலை), சிவகுமார் (சுவிஸ்), கவிதாஸ், தயாளினி (அமரர்) மற்றும் சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காளிகோயிலடி,*
*வட்டு.தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*
*T.P. 021 4591321, 0777 030888*

தகவல்:
க.கவிதாஸ்.
(மகன்)
(35400)(18-32-11-43)

### அருட்சகோதரி
### அன்ரனி ஜோசவ் பிரகாசம் (தி.கு)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் தற்பொழுது இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்து வந்தவருமான அருட்சகோதரி அன்ரனி ஜோசவ் பிரகாசம் (தி.கு) நேற்று (17-08-2004) செவ்வாய்க்கிழமை இறைவனடி இணைந்துவிட்டார்.

இவரது பூதவுடல் நாளை (19.08.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
*121, பிரதான வீதி, யாழ்ப்பாணம.* (35400)(21-13-32-15)
அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் மாகாணத் தலைவி,

### திருமதி
### இளையதம்பி தெய்வமணி



வேம்படி உடுத்துறையைச் சொந்த இடமாகவும், விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையதம்பி தெய்வமணி 17-08-2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பியின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம், தமிழ்செல்வி, விஜயசிங்கம், கதிர்காமநாதன், அமர்தநாதன், தெய்வரஞ்சிதம், தெய்வசோதி, தெய்வராணி, தெய்வரஜனி, ரகுநாதன், தெய்வமதி, தெய்வசிறி ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துராஜா, புனிதவதி, சாந்தகுமார், இராசலக்சுமி, சிவசோதி, இந்துராணி, விஜயரஞ்சனா, இராசகுமார், ஜெயபாலன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (19-08-2004) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 12ஆம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விசுவமடு சந்தி,*
*விசுவமடு.* (35392)(21-18-32)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஓகன் ஆசிரியர்
**சு.ரஜீந்திரன்** அவர்களின் அன்புத் தாயாரான
**திருமதி அன்னபூரணம் சுப்பிரமணியம்**
**(பூரணக்கா)**
அவர்கள் காலமானதையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**மாணவர்களும், நிர்வாகிகளும்.**
*பாவையூர் அபிவிருத்திக்குழு* (35388)(21-13-18-32)


**கணேசன் சென்ரர் (இணுவில்)**

வேலையாள் தேவை

தையல் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு:
கணேசன் சென்ரர்,
K.K.S. வீதி, இணுவில்.
(வீ-36787)(13-18-32)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி லலிதா லிங்கேஸ்வரனின் தந்தையார்
**செல்லையா இரத்தினம்**
அவாகளின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(35390) **அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஆளணியினர்**
(21-18-32-13) **யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.**


## தேவை

**விற்பனைப் பிரதிநிதிகள், கூலி ஆள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உறவினர் அல்லாத இரண்டு நபர்களுடைய சிபார்சுக் கடிதத்துடன் நேரில் வரவும்.**

தொடர்புகளுக்கு:
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
*இல. 31, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (35389)


# பாராட்டி வாழ்த்துகின்றேன்

க.பொ.த. (உ/த) பரீட்சை (2004) இல் வரலாறு பாடத்தில் சித்தியெய்திய எனது மாணவச் செல்வங்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு அதிவிசேட, விசேட சித்திகளைப் பெற்ற பின்வரும் மாணவ மணிகளையும் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**நியு றோயல் கல்விநிலையம்**
*சங்கத்தானை*

1. வீ.சிவரூபி A
2. ச.பாரதி A
3. வி.கோபிகா A
4. ச.முகுந்தன் A
5. கோ.கோகுலகாந்தன் A
6. கு.ரவிவர்ணன் A
7. ச.நிரஞ்சினி A
8. க. கல்பனா A
9. ந. குகப்பிரியா A
10. ம.சிவதர்சினி B
11. கி.சுகிர்தா B
12. வே.சசிப்பிரியா B
13. யோ.சுதர்சினி B
14. பு.மைதிலி B
15. இ.நித்தியா B
16. வே. மனோகரன் B
17. கோ.கோகுலபவன் B
18. சி.யூலியற்செபஸ்ரீனா B

☒ மொத்த மாணவர் தொகை -35
☒ அதி விசேட சித்தி-09
☒ விசேட சித்தி-09
☒ திறமைச்சித்தி-12
☒ சித்தி-05
☒ சித்தியெய்திய வீதம்-100%

**கிருஷ்ணா கல்வி நிலையம்**
*கொடிகாமம்*

1. சு.ஜீவிதா A
2. பா.பாலகௌரி B
3. க.சுகுணா B
4. த.வினோதினி B

☒ மொத்த மாணவர் தொகை-12
☒ அதி விசேட சித்தி -01
☒ விசேட சித்தி -03
☒ திறமைச்சித்தி -06
☒ சித்தி -02
☒ சித்தியெய்திய வீதம் -100%

(35367)(13-18-32) *சீ.சுஜீகரன், வரலாறு பாட ஆசிரியர்.*

## கண்ணீர் அஞ்சலி

செல்லையா இரத்தினம்
(யாழ்.மாவட்ட சிறான் அமைப்பாளர், முன்னாள் பிரதேச செயலர்,வேலணை)
எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி க.கவிதாவின் பாசமுள்ள தந்தையார்
**செ.இரத்தினம்** அவர்களுக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். (35301)


**உடனடியாக ஒலியமைப்பு வேலைக்குஆள்தேவை**

மின்னியல் வேலை தெரிந்தவர்களும் ஒலியமைப்பில் அனுபவம் உள்ளவர்களும் புதிதாக வேலை பழகவிரும்பும் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். யாழ்.மாநகரசபை எல்லையை அண்டியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: மகா மினி ஒலியமைப்பு,
958/47, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்
(35399)


## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

**பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் செவ்வாய்க்கிழமை, ஓகஸ்ட்-17-2004**

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,422.62 | 1,421.07 | 1.55 | 0.11 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,120.74 | 2,122.57 | (1.83) | (0.09) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) | | | | |
| ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,470.97 | 1,469.37 | 1.60 | 0.11 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,201.05 | 2,202.96 | (1.91) | (0.09) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 121.70 | 152.30 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 7.20 | 10.10 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 2,311.00 | 2,379.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 348.40 | 348.00 | | |

**இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்**

| கம்பனி பெயர் | விகிதம் | XDதிகதி | உரிமம் கை மாற்றம் திகதி |
|---|---|---|---|
| எலிஃபன்லைற் (வழங்கல் விலை-10 ரு) | 1இற்கு2 | 31-08-2004 | 01-10-2004 |

குறித்த திகதியில் பங்குலாப அறிவித்தல்களோ போனஸ் வழங்கல்களோ இடம்பெறவில்லை.

*குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை.

# யுத்தத்தால் அகதிகளாக்கப்பட்டோம் சமாதான காலத்திலும் அதே நிலைதான்!

**கடந்தகால யுத்தம் காரணமாக வலி. வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து இன்னமும் மீளக்குடியமரமுடியாமல் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்களின் நிலை தொடர்பாக வலி.வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் ஊடாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் இங்கு பிரசுரமாகிறது.**

நாட்டின் யுத்த நிலைமை காரணத்தினால் 1990ஆம் ஆண்டு எமது மக்கள் வலிகாமம் வடகுப் பிரதேசத்தினைவிட்டுப் பலகோடி சொத்துக்கள், உறவுகள் எல்லாவற்றையும் இழந்து புலம்பெயர்ந்துள்ளார்கள். அதன் பின்னர் அகதி முகாம்களில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நிலையில், 2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் பிரதிபலனாக வேறு இடங்களில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் தத்தமது சொந்த இடங்களிற்கு மீளக்குடியமர்ந்து கொண்டிருக்கும்வேளையில், வலிகாமம் வடக்குப் பிரதேசத்தினைச் சேர்ந்த மக்களாகிய நாமும் எமது சொந்த இடங்களிற்கு மீண்டும் செல்வோம் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால, எம் இடங்களை அதிஉயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மீளக்குடியமரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆதலால் எம்மக்களிற்கு ஏற்பட்டுள்ள முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றைத் தங்கள் முன்வைக்கின்றோம்.

**முகாம்களில் வாழும் மக்களின் அவலம்**

எம் மக்கள் புலம்பெயர்ந்து 14 வருடங்களாகின்றது. அவர்கள் வாழ்விடங்கள் இல்லாமல் பெரிதும் சிரமப்படுகின்றார்கள்.

அகதி முகாம்களில் சிறுசிறு ஓலைக் குடிசைகளில்தான் வாழ்கின்றார்கள். நிரந்தரமாக இருப்பதற்கு என்று காணிகள் எதுவும் இல்லாமல் ஒரு சிறிய காணியில் ஏராளமான குடிசைகளை அமைத்து வாழ்கின்றபோது அங்கு சுகாதாரச் சீர்கேடுகளாலும் இதர வசதிகள் இல்லாததாலும் பெரும்பாலானோர் இனம் தெரியாத நோய்களால் பீடிக்கப்படுகின்றார்கள். சிறார்கள் போஷாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவைகள் மட்டுமின்றி பிறக்கும் குழந்தைகளும் ஊனமுற்றவர்களாகப் பிறக்கின்றார்கள். இவைகள் மட்டுமின்றி இவ்வாறான பிரச்சினைகளுடன் வாழும் மக்களிற்கு அன்றாட செலவுகளைப் போக்கிக்கொள்வதற்குப் பெரும் சிரமங்களின் மத்தியில் கடற்றொழிலுக்குச் செல்கின்றார்கள்.

**தொழில் புரியும் இடங்களிலும் சிரமம்**

வேறு பிரதேச மீனவர்களின் கடல் பரப்பில்தான் எம்மவர்களும் தங்கள் படகுகளை வைத்துத் தொழில் புரிகின்றார்கள். அவ்விடங்களில் எமது படகுகளையும் உபகரணங்களையும் வைத்துத் தொழில்புரிவதற்கு இடவசதிகள இல்லாமையினால் (நெருக்கடிகள்) பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் எமது மீனவர்கள் எதிர்நோக்குகின்றனர். இதேபோன்றுதான் கடற்பரப்பிலும் இடநெருக்கடி காரணமாகத் தொழில்புரிய முடியாதநிலையில் மீனவர்கள் சிரமப்படுகின்றார்கள்.

**சிறுவர்களின் கல்வி நிலை பாதிப்பு**

அன்றாட வாழ்வில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியைப் பொருளாதார வசதி இன்மையால் இடைநிறுத்திவிடுகின்றார்கள். ஆதலால் அவர்களால் தொடர்ந்து படிக்கமுடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. அதுமட்டுமின்றிச் சிறார்களிற்குச் சுகாதாரவசதி இன்மை போஷாக்கின்மை காரணமாக நோய்களும் ஏற்படுகின்றன.

பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களின் கஷ்டநிலைமைகளை நாம் தங்களிற்குப் பல தடவைகள் கூறியுள்ளோம்.

14 வருடங்களாக அகதி முகாம்களில் வாழ்ந்துவருகின்றோம். இனியும் அகதி முகாம்களில் வாழ வேண்டுமா?

தாங்கள் இவற்றினைக் கருத்திற்கொண்டும் எம் மக்களின் எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டும் துன்ப, துயர வாழ்வு வாழ்வதற்கு எம் மக்களை மீளக்குடியமர்த்துமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-70)

## இலக்கிய விழா ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.18

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் எதிர்வரும் ஒக்ரோபர் 8 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடத்தப்படவுள்ள இலக்கிய விழா தொடர்பான இரண்டாவது ஆலோசனைக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை யாழ். கல்வி வலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-5)

## ஆசிரியர்களுக்கான செயல்நிலை ஆய்வுக் கருத்தரங்கு

வட்டுக்கோட்டை,ஓக.18

சங்கானைக் கல்விக் கோட்ட மூளாய், பணணாகம் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான செயல்நிலை ஆய்வுக் கருத்தரங்கு இம்மாதம் 23ஆம் திகதிமுதல் 27ஆம் திகதி வரை தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. (8-161)

## வடமராட்சியில் போக்குவரத்துப் பொலீஸார் தீவிர சோதனை நடவடிக்கை

கரவெட்டி,ஓக.18

வடமராட்சியில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸார் வாகனச் சோதனையைத் தீவிரப்படுத்தியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வடமராட்சியின் பிரதான இடங்களான நெல்லியடி, மாலுசந்தி, மந்திகை, புலோலி, பருத்தித்துறைப் பகுதிகளில் சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு சாரதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் என்பவை சோதனையிடப்பட்டன. (8-70)

## மக்கள் வங்கியில் தவறவிட்ட பணம் யாருடையது?

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு முன்பாக வாடிக்கையாளர் ஒருவரால் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் வங்கி வாடிக்கையாளர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு வங்கி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இப்பணம் தவறவிடப்பட்டுள்ளது.

பணத்தைத் தவறவிட்டவர்கள் வங்கி முகாமையாளருடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழ். மாநகர ஆணையாளர் மும்பாய் செல்கிறார்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா மும்பாய்க்குச் செல்லவுள்ளார்.

உள்ளூராட்சி அதிகாரிகளுக்கான நகர அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இந்தியாவில் மும்பாய் நகரில் நடைபெறுகிறது. அந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வதற்காகவே ஆணையாளர் மும்பாய் செல்கின்றார்.

இவருடன் மட்டக்களப்பு, காத்தான்குடி, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி அதிகாரிகளும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வதற்காக மும்பாய் செல்கிறார்கள். (8-13)

# தங்க நகைகளை விலைக்கு வாங்கும்போது விற்பவரின் விவரங்களைப் பதிவுசெய்யவேண்டும்

## நகைக்கடை உரிமையாளர்களுக்குப் பொலீஸார் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.18

பொதுமக்களிடமிருந்து தங்க நகைகளை விலைக்கு வாங்கும் போது நகைக்கடைகளின் உரிமையாளர்கள் விற்பவர்களின் விவரங்களைப் பதிவேடுகளில் பதிவுசெய்யவேண்டும்.

- இவ்வாறு நகைக்கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த செனவிரட்ண.

கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை நகைக்கடை உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகசங்கப் பிரதிநிதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ். பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொறுப்பதிகாரி இதனை அறிவுறுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நகைக்கடை உரிமையாளர்கள், பொதுமக்கள் விற்பதற்காகக் கொண்டுவரும் நகைகளை வாங்கும்போது தனியாக ஒரு புத்தகம் ஒன்றை வைத்து விற்பவர்களின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், விற்ற பொருள், விற்கப்பட்ட நாள் என்பவற்றைக் கட்டாயம் பதிந்திருத்தல் வேண்டும்.

இந்தப் புத்தகங்களைப் பொலீஸாரின் பார்வைக்காக நகைக்கடையில் வைத்திருத்தல் வேண்டும். வாரம் ஒருமுறை சகல நகைக் கடைகளுக்கும் பொலீஸார் சென்று இந்தப் புத்தகங்களைப் பார்வையிடுவார்கள்.

இவ்வாறு பதிவேடுகளில் பதிவதன் மூலம் திருடப்பட்ட நகைகள் விற்பனை செய்யப்பட்டிருந்தால் இலகுவில் கண்டு பிடிக்கமுடியும்.

இதற்குச் சகல நகைக்கடை உரிமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நகரப்பகுதியில் பொலீஸார் கடமையில் ஈடுபடவேண்டுமென நகைக்கடை உரிமையாளர்கள் பொலீஸாரிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 24 மணி நேரமும் நகரப் பகுதியில் பொலீஸார் சிவில் உடையில் கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ரட்ணாயக்கா மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஆறுமுகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (8-7)



பண்டத்தரிப்பு, சாந்தை விநாயகர் சனசமூக நிலையம், சாந்தைக் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் 44ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் அண்மையில் நடைபெற்றன. இதில் விசேட அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், மத்திய பிரிவில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட அ.திருச்செல்வத்திற்கு பரிசிலையும் சான்றிதழையும் வழங்குவதைப் படத்தில் காணலாம். சங்கச் செயலாளர் இரா.இராஜேஸ்வரன் மத்தியில் காணப்படுகிறார்.

*(படம்: வலி.தென்மேற்கு செய்தியாளர்)*

# தொழில்துறைப் பயிற்சியை முடித்தோருக்கு வங்கிக் கடன்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ. தொழில்நுட்பக்கல்லூரியில் தொழில் துறைப் பயிற்சியில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சுயதொழில் வேலைவாய்ப்புக்காக இரண்டு லட்சம் ரூபா வரையான வங்கிக் கடன் வழங்கப்படவுள்ளது.

திறன் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள இந்த வங்கிக் கடன் முதற்கட்டமாக 50 பேருக்குக் கிடைக்கும்.

இதனைப் பெறவிரும்பும் மாணவர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் என்.யோகராஜன் கேட்டுள்ளார். (ஐ-5)

# மாநகர எல்லைக்குட்பட் ட 15குளங்கள் நவீன முறையில் புனரமைக்கப்படும்

## நிதியை வழங்க புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் இணக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட முக்கிய 15குளங்களை நவீனமுறையில் புனரமைப்பதற்கான நிதியினை வழங்குவதாக புனர்வாழவு அமைச்சின் மேலதிக செயலாளர் குமாரதாஸன் உறுதியளித்துள்ளார்.

இத்தகவலை மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புனரமைக்கப்படாமல் உள்ள குளங்களைப் புனரமைப்பதுடன் முக்கிய 15 குளங்களை நவீனமுறையில் புனரமைத்து நீரினைத் தேக்கிவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிதி 'நொராட்' திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாகக் குளங்களினுடைய படவரைவுகள் சேகரிக்கப்படுகின்றன.

யாழ். நகரிலுள்ள ஆரியகுளம், புல்லுக்குளம் ஆகிய இரண்டும் அதிநவீன முறையில் புனரமைக்கப்பட்டு அவற்றைச் சுற்றி வீதிகளையும் அமைப்பதற்கு மேலதிக செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இக்குளங்களினுடைய கட்டட வேலைபற்றி ஆராய்வதற்கு கொழும்பிலிருந்து கட்டடநிபுணர்கள் குழுவொன்று அடுத்தவார முற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளது. அக்குழுவினர் குளங்களைப் பார்வையிட்டு அதற்கான செலவினங்களை வகைப்படுத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பார்கள். அதனடிப்படையில் கட்டடப் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் - என்றார். (8-13)

## மதமாற்றத் தடைச்சட்டத்தை எதிர்த்து கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.18

மதமாற்றத் தடைச் சட்ட மூலத்துக்கு எதிராகப் பாதயாத்திரை மற்றும் ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சகோதரத்துவ சங்கம் மற்றும் சமய சுதந்திர சங்கம் உட்படப் பல சங்கங்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பமான இந்தப் பாதயாத்திரையில் கலந்துகொண்டவர்கள் கிறிஸ்தவ விவகார அமைச்சுக்கு முன்பாக நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கிறிஸ்தவ விவகார அமைச்சரிடம் அவர்கள் கையளித்தனர். (ஓ-9)

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

க.பொ.த. (உயர்தரம்) - 2004

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் 2004 ~ க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த கீழ்வரும் மாணவர்களையும், அவர்களைக் கற்பித்து வழிநடத்திய அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| மாணவர் பெயர் | பெறுபேறுகள் |
|---|---|
| 01. கனகரட்ணம் கார்த்திபன் | 3A |
| 02. கனகசபை கயந்தன் | 3A |
| 03. முத்துலிங்கம் விஜிதா | 3A |
| 04. சிதம்பரநாதர் சிவாஜினி | 3A |
| 05. வீரசிங்கம் சிவரூபி | 3A |
| 06. நாதன் சிந்துஜா | 3A |
| 07. தெய்வேந்திரமூர்த்தி ஜெயரூபி | 2A, B |
| 08. பத்மநாதன் அர்ச்சுதன் | 2A, B |
| 09. கனகசுந்தரம் கலீபன் | 2A, B |
| 10. தங்கராஜா யஸ்மினா | 2A, B |
| 11. கணேசலிங்கம் தேவிகா | 2A, B |
| 12. தெய்வேந்திரன் ஆர்த்திகா | 2A, B |
| 13. மணிவண்ணன் துர்க்கா | 2A, B |
| 14. மகேந்திரன் சுவர்ணப்பிரியா | 2A, B |
| 15. பொன்னுச்சாமி பிரதிபா | 2A, B |
| 16. சத்தியசீலன் சங்கீதா | 2A, B |
| 17. அமிர்தலிங்கம் சுமன் | 2A, C |
| 18. வேலாயுதபிள்ளை தருசன் | 2A, C |
| 19. பரமேஸ்வரன் சைந்தவி | 2A, C |
| 20. வேலுப்பிள்ளை பாமினி | 2A, C |
| 21. குணசிங்கம் மேகலா | 2A, C |
| 22. குணசேகரன் திவ்வியா | 2A, C |
| 23. இரத்தினசிறீந்திரன் நிலானி | 2A, C |
| 24. கந்தசாமி குமுதினி | A, 2B |
| 25. மகேந்திரன் கஜிதா | A, 2B |
| 26. பஞ்சாட்சரம் இந்துசா | A, 2B |
| 27. தங்கராஜா தர்சிகா | A, 2B |
| 28. சண்முகநாதன் காயத்திரி | A, 2B |
| 29. சந்திரசேகரா பாரதி | A, 2B |
| 30. செல்லத்துரை குமுதினி | A, 2B |
| 31. சரவணலிங்கம் லோஜனா | A, 2B |
| 32. சிவராஜா கவிதா | A, 2B |
| 33. கணபதிப்பிள்ளை சர்மினி | A, 2B |
| 34. சோமசுந்தரம் துவாசினி | A, 2B |
| 35. சின்னத்தம்பி மதனிகா | A, 2B |
| 36. தங்கராஜா தயாதேவி | A, 2B |

(சி-36782) (24-12-15)

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

## வவுனியாவில் மகளிர் சங்கமம்

வவுனியா,ஓக.18

வவுனியாவில் நேற்றுமுன்தினம் பெண்கள் சங்கம நிகழ்வு இடம்பெற்றது. நேற்றுமுனதினம் காலை 9மணிக்கு விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தேசியக்கொடி ஏற்றிவைக்க, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின். இதில் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தி.ஞானவேல் ஏற்றிவைத்தார். வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை தலைமையில் நிகழ்வுகள் மாலைவரை நடைபெற்றன.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன, சிவசக்தி ஆனந்தன், கனகரட்ணம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், விடுதலைப் புலிகளின் மருத்துவர் எழில்மதி கரிகாலன், முல்லைததீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன! (ஒ-164)


## மடிப்பு விநியோக ஊழியர்கள் தேவை

எமது நிறுவனத்தில் பத்திரிகை மடித்து அதிகாலை விநியோகம் செய்யக்கூடிய ஊழியர்கள் தேவை

தகைமைகள்:

1. க.பொ.த.சாதாரணதரக கல்வித்தரம்.
2. இரவுக்கடமை புரியக்கூடிய உடல்நலம் உள்ளவராக இருக்கவேண்டும்.
3. மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை.
4. மோட்டார் சைக்கிள் இல்லாதவர்கள் மடிப்பு ஊழியராகவும் கடமையாற்றலாம்.

குறிப்பு:
திறமை முயற்சிக்கேற்ப திருப்திகரமான ஊதியம் வழங்கப்படும்.

விரும்புவோர்
18.08.2004முதல் 23.08.2004வரை
அலுவலக நேரத்தில்
ஆவணங்களுடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
மனிதவள சேவை,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# கண்ணீர் அஞ்சலி



சித்தன்கேணி கிளைக்குழுவின் நீண்டகால
நிர்வாகசபை உறுப்பினரும்,
எமது முன்னாள் பணிப்பாளர்சபை
உறுப்பினரும் தற்போது
பொதுச்சபைப் பிரதிநிதியுமான

## அண்ணாமலை மார்க்கண்டர்

15.08.2004ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைந்தோம். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்,
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி-36781) (26-12-15-24)

## முதலாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

தாயின் மடியில் பூவாக
29 - 01 - 1984



லொறிப் பாதகனின் கொடூர அழிப்பில்
30 - 08 - 2003

அமரர் **மகாதேவன் தனரூபன்** (செல்வா)

(தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர்),
கலைவாணி சனசமூக நிர்வாக சபை, உறுப்பினர்)

ஆண்டொன்று ஆனதய்யா ~ செல்வா
நெஞ்சில் ஆறாத சோகம் நிழலாடுதய்யா!
பூவாக சிரித்தவனே உனக்கு பூமாலை
தொடுக்கின்றோம் பாராயோ!
பார்போற்ற வாழ்ந்தவனே ~ பாதகனின்
பார ஊர்தியாய் பாரைவிட்டு மறைந்தாயோ!
தாயும் கதறித் துடிக்கின்றாள்
தந்தை கண்ணீர் வடிக்கின்றார்
உறவும் உனையே நினைக்குதய்யா!
உள்ளம் விம்மி வெடிக்குதய்யா!
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால்
வந்திடய்யா செல்வா எங்களிடம்!
வந்திடய்யா செல்வா எங்களிடம்!
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

உனது உறவுகள்:
அப்பா மகாதேவன் (இ.போ.சபை),
அம்மா, அக்கா, தங்கை,
அண்ணன் தனராஜ் (இ.போ.சபை,
களஞ்சியப்பணியாளர், காரைநகர்).

இ.போ.சபை. டிப்போ அருகில்.
கோண்டாவில்.
(35364) (26-12-15-24)


# "மகா சில்க்ஸ்" இன்

# 5ஆம் ஆண்டுப் பூர்த்திவிழா



எமது ஸ்தாபனம் யாழ். மக்களுக்குச் சேவை செய்ய ஆரம்பித்து
இன்று ஐந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்து 6ஆவது ஆண்டில்
காலடி எடுத்து வைப்பதை
எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

## திருமண முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு முதல்தர ஸ்தாபனம்:

# மகா சில்க்ஸ் பியூட்டி சில்க்ஸ்

40A, 32, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

69, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

இன்றைய நாகரிகத்துக்கேற்ப உங்களுக்கு வேண்டிய
முகூர்த்தப்பட்டுப் புடைவைகள் பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட

- பெண்களுக்கான சாறி வகைகள்
- மங்கையர் மனம் விரும்பும் பஞ்சாபி, சோலி கிற், ஸ்கேட் & பிளவுஸ்
- ஆடவர்களுக்கான சூட்டிங், சேட்டிங், றெடிமேற் ஆடை வகைகள்
- இன்னும் சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைவகைகள்

முதலானவற்றை மலிவுவிலையில் தெரிவுசெய்திட
இன்றே விரையுங்கள்......

(சி-36775) (24-12-15)

# முள்ளிப்பகுதிக்கான நீர்விநியோகத்திட்டம் வெடிப்பொருள்களால் வேலைகள் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக.18

யாழ்.மாநகரசபையினால் அரியாலைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் குடிதண்ணீர் விநியோகத்துக்கான குழாய் இணைப்பு வேலைகள் வெடிப்பொருள்கள் காரணமாகத் தாமதமடைந்திருக்கின்றன.

அரியாலையில் கண்டி வீதிக்குக் கிழக்குப் புறமாக முள்ளிவரையான பிரதேசத்தில் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்துக் கொ[illegible]ர் 5கிலோ மீற்றர் தொலைவுக்கு நிலத்தடிக் குழாய்கள் பொருத்தப்படவுள்ளன. அரியாலை சித்திவிநாயகர் கோயிலடி பொதுக கிணற்றில் இருந்து நீரை விநியோகிக்க வசதியாக இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

நிலத்தடிக் குழாய்களைப் பொருத்தும் ஒப்பந்த வேலையை 'மனோகரன் அண்ட் வெற்றிவேல் கட்டட நிர்மாணப் பொறியியல் நிறுவனம்' மேற்கொண்டு வருகிறது.

சுமார் ஒன்றரை அடி ஆழத்தில் தண்ணீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காகத் தற்சமயம் தரையில் அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

மிதிவெடிகள் அகற்றப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்பட்ட இந்தப் பிரதேசத்தில் அகழ்வு வேலைகளின்போது வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

வெடிக்காத ஷெல் குண்டுகள் மற்றும் வெடிப்பொருள்களின் பாகங்கள் காணப்படுவதை அடுதுக் குழாய் நீர் விநியோக அகழ்வு வேலைகள் தாதமடைந்திருக்கின்றன.

வெடிப்பொருள்கள் காணப்படுவதை அடுதுச் சம்பந்தப்பட்ட கட்டடநிர்மாணப் பொறியியல் நிறுவனம் கண்ணி அகற்றும் அமைப்புடன் தொடர்புகொண்டு முறையிட்டிருக்கின்றது. (ஐ)

## கல்வயல் பகுதியில் திருடர் நடமாட்டம் அதிகரிப்பு

தென்மராட்சி,ஒக.18

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் இரவு, பகல் வேளைகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பகல் வேளைகளில் ஆள்களில்லாத வீடுகளில் ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்கும் திருடர்கள் பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் செல்வதாகவும், இரவு வேளைகளில் வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் வீட்டினுள் நுழைந்து பொருள்களை அபகரித்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதிமக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிக்கிறார்கள். (8-117)

# சர்வதேச இளைஞர் முகாம் இந்தமுறை யாழ்ப்பாணத்தில்

## 'போரூட்' அமைப்பின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஒக.18

'போரூட்' நிறுவனம் தனது இவ்வருடத்துக்கான சர்வதேச இளைஞர் முகாமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. கடந்த வருடம் இம்முகாம் புத்தளத்தில் நடத்தப்பட்டது. அதில் சுவீடன், நோர்வே மற்றும் இலங்கையைச் சேர்ந்த 350 இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

இம்முறை 'இணக்கப்பாடு' என்ற கருப்பொருளில் இந்த இளைஞர் முகாம் நடைபெறவிருக்கின்றது. இலங்கை, சுவீடன் மற்றும் நோர்வேயைச் சேர்ந்த இளைஞர்களுடன் வியட்னாம், கம்போடியா போன்ற நாடுகளிலிருந்தும் மொத்தம் 600 இளைஞர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்மாதம் 25ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதிவரையிலும் யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெறவிருக்கும் இளைஞர் முகாமை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னின்று நடத்துவார்கள்.

சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்பும் வகையில் வடக்கையும் தெற்கையும் சேர்ந்த நாற்பது இளைஞர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள். மொழி தொடர்பான சிக்கல்கள் இருந்தபோதிலும் நட்புக்கு வார்த்தைகள் அவசியமில்லையென்று ஏற்பாட்டாளர்கள் கருதுகிறார்கள்.

(ப)

# 'நிகொட்' திட்டத்தின் கீழ் 3 பாடசாலைகளுக்கு வகுப்பறைகள்

தென்மராட்சி,ஒக.18

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளில் வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன.


மாசார் அ.த.க.பாடசாலை, இயக்கச்சி அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் 120x25 அடி வகுப்பறைத் தொகுதிகளும், சோரன்பற்று கணேசன வித்தியாலயத்தில் இருமாடிக் கட்டடமும் அமைக்கப்படவுள்ளன.

இக்கட்டடங்களை அமைக்க 'நிகொட்' நிறுவன கார்ப் திட்டத்தின கீழ் நிதி ஒதுக்கபட்டுள்ளது.

பளைக் கல்விக் கோட்டத்தில் அனைத்துப பாடசாலைகளும் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து தற்போது தற்காலிக வகுப்பறைகளில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

பளை மத்திய கல்லூரியில் விஞ்ஞான கூடம, நூலகம் ஆகிய கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.(8-117)



**மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் முல்லைத்தீவு சிறுவர் வாழ்வகத்திற்கு அண்மையில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் கட்டில்களை அன்பளிப்புச் செய்துள்ளது. கழகத்தின் தலைவர் லயன் எஸ்.சதிஸ்குமார், செயலாளர் லயன் எஸ். பிரதீபன் ஆகியோர் விடுதிப் பொறுப்பாளரிடம் இக்கட்டில்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:வலி.தென்மேற்குச் செய்தியாளர்)**

# யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டன

வலி.வடக்கு,ஒக.18

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் கடந்த மூன்று மாதங்களாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி புள்ளிவிவரக் கணிப்பீட்டின்போது பொதுமக்களுடைய பல தேவைகள் இனம் காணப்பட்டுள்ளன.

இதன் கீழ் தேசிய அடையாள அட்டையின்றியும் வாக்காளர் பதிவுகள் இல்லாமலும் பலர் இருப்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை -

கணவனினால் கைவிடப்பட்டுப் பிள்ளைகளுடன் வாழுகின்ற பல குடும்பங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இக்குடும்பங்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் காண்பதற்கு இலவச சட்ட உதவிகளைப் பெற நடவடிக்கையெடுக்கப்படுகின்றது.

பிறப்புப் பதிவுகள், திருமணப்பதிவுகள் இல்லாமல் பலர் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக பிறப்புச் சான்றிதழ்கள் பெறுவதற்கும் தேசிய அடையாள அட்டைகள் பெறுவதற்கும் வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதற்கும் யாழ்.பிரதேச செயலர் நடவடிக்கையெடுத்து வருகின்றார்.

(8-5-86)

---

# உள்ளுணர்வின் உந்துதலால் உருவான உருவங்கள்

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட பதின்மூன்று யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியக் கண்காட்சி மிகச்சிறப்பாக நீண்ட நாளகள் நடைபெற்று வருகின்றது. எமது மண்ணின் பல்வேறு பரிமாணங்களை ஓவிய வெளிப்பாடுகள் புலப்படுத்தி நிற்கின்றன. இலங்கை, இந்தியா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தமக்கிடையே தொடர்புகளற்று வாழும் ஓவியர்களின் படைப்பாற்றல்கள் இங்கே காணக்கிடக்கின்றன.



இன்று எமது அடையாளங்கள் என்பது குறிப்பிட்ட மொழி, இனம், கலைகலாசாரம், வரலாறு என்கின்ற வரையறைகளைத் தாண்டிய நிலையையும் உய்த்துணரக்கூடியதாகவுள்ளது. பல்வேறுபட்ட அரசியல், சமூக, பொருளாதார சூழநிலைகள் இதற்குக் காரணமாக அமைகின்றன. மாற்றமடைந்து வருகின்ற மானுட உலகில் மாறுபட்ட, வேறுபட்ட தேடல்களும் முன்வைப்புகளும் தவிர்க்க முடியாததாகின்றன.

எமது கலை முகிழ்ப்புகளின் பிரசவங்கள், அதன் நுட்ப முறையிலும், ஊடகத் தேடலிலும் வெளிப்பாட்டுப் பிரயோகத்திலும் மாற்றப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மாறுபட்ட நுட்ப முறைகளிலும், பாணிகளிலும் ஒப்புவிக்கப்படுகின்ற இவ்வாறான ஓவியங்களில் பல்வேறுபட்ட உள்ளுணர்வின் உந்துதல்கள் உருப்பெற்றிருக்கின்றன. ஓவியம் வெறும் கட்புலக்கலை மட்டன்று. ஏனைய புலன்களையும் வீச்சுக்களையும் தன்னகத்தே ஈர்க்கின்ற சக்தி இதற்குண்டு. ஓவியங்களை ஆழ்ந்து நேசிக்கின்ற ஒருவர் இவற்றைப் புடம்போட்டு வாசித்தறிந்து கொள்ளலாம்.

பல்கலைக்கழக நுண்கலைத்துறைக் காட்சிக்குள் நுழைகையில், காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற 35 வகையான ஓவியங்கள் கருத்தையும் கவனத்தையும் ஈர்ந்தது. தனித்தனியே சட்டமிடப்பட்டிருந்த ஓவியங்களுக்கிடையேயான இடைவெளி, வெளிச்சம், பின்னணி என்பன ஏற்பாட்டாளர்களால் ஏற்றமுறையில் ஏற்றம் கண்டிருந்தது.

ஓவியங்களில் பெரும்பாலானவை மரபுச் செல்நெறிகளிலிருந்து மாறுபட்டிருக்கின்றன. கே.ராஜரட்ணம், ஏ.இராசையா, எம்.கனகசபை முதலியோரின் ஓவியங்களில் உள்ளதை உள்ளவாறு காட்டும் இயற்பண்பே மீதமாகின்றது. பிரதிமை உருவங்களும், இயற்கையோடு இணைந்த மானுடத் தழும்புகளின் பிரதிருபங்களும் அங்கே பிரதிபலிக்கின்றன.

ஏனைய ஓவியங்களில் நுட்பங்கள், வர்ணப் பிரயோகங்கள், உருவப்பயன்பாடுகள், மேற பரப்புகள், ஊடகங்கள் என்பன புதிய பாணியில் புகுத்தப்பட்டிருக்கின்றன. போர்ப் பாதிப்புகளும் இயற்பண்பு ஓவிய மரபிலிருந்து மாறுபட்ட வடிவங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

மேற்பரப்பின் தன்மையை வேறுபட்ட ஊடகவடிவில் உருவாக்கிய வாசுகி ஜெயசங்கர், ஆர்.வைதேகி, ரி.சனாதனன், நந்தா கந்தசாமி ஆகியோரின் படைப்புகளில் 'கொலாஜ்' எனப்படும் ஒட்டுருவப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. மானுட இருப்பின் பெறுமதி சிதைந்து போயுள்ள மானுடத்தின் தேடல், போர்க்காலத்தின் பொல்லாத பதிவுகள், உறவுகளைத் தேடும் சொந்தங்களின் அவலம்... என்பன இவர்களின் ஓவியங்களில் பெரிதும் புலப்படுத்தப்படுகின்றன.

எஸ்.சிவரூபனின் ஓவியத்தில் ஏகந்தப் பயணிப்பின் பண்புருக்கள் தென்படுகின்றன. அனுசுயா சுந்தரலிங்கத்தின் ஓவியமும் எட்வாட்மங்கினது கோட்டுப் புலத்தின் தன்னியக்க வெளிக்காட்டுதல்கள் அடங்கியுள்ளன. ஆழ்மன அலசல்கள் கோட்டுருவங்களால், தீட்டும் வர்ணங்களால் காட்டப்படும் இயல்பு கண்ணுக்கு விருந்தாகின்றது.

எமது வாழ்வுப் பயணிப்பின் கேள்விக் கணங்களை ஆழ்ந்துநோக்குகின்றார் கோபாலப்பிள்ளை கைலாசநாதன். ஏதோ இல்லாத ஒன்றை இல்லறத்தில் தேடுவதுபோல் அருந்ததி ரட்ணராஜின் வீட்டுமூலை.

அகத்தின் அவலமொன்றைப் புறத்தெறிப்பு முயற்சியாக்கும் கருணாவின் உயர்ச்சி! ஐங்கரனை இருகரனாக்கி இன்பம் காணும் நிலாந்தனின் பிள்ளையார் நிலை என்னே....? எம் கரமிழந்த உறவுகளோடு ஒப்பீடோ?

மரபுவழிச் சிந்தனைகளையும் ஓவிய ரசனையையும் மாற்றிய அகமுக நோக்கே இவ்வாறான ஓவியங்களில் அதிகம் புலப்படுகின்றது. ஆழ்மனச்சிந்தனைகளின் வெளிப்பாடுகளே கிளர்ந்தெழுந்துள்ளது. கற்பனையின் எல்லைக்குட்படாதிருந்த உருவங்கள் பல சுவைஞனின் இரசனையில் மிகைப்படுத்தப்பட்ட யதார்த்தமாக விளங்கும் 'சாரியலிசம்' எனப்படும் ஓவியக் கொள்கைப் பரப்பு இவ்வோவியங்களில் அதிகம் பாதிப்புக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நவீன ஓவியத்தினது புரிதல் என்பது பலவாறான தேடல், கலையறிவு, கலை அனுபவம் மூலமே சாத்தியமாகின்றது. ஓவியப் பார்வை தொடர்பான ஒருவரது சமூகப் பின்புலம், பட்டறிவு, ஓவிய ஈடுபாடு, ஆராய்தறிவு போன்றவையும் புதிய கலை இலக்கியத் தூண்களில் கால்பதிக்க ஊன்றாகின்றது. மாற்றமடைந்து வருகின்ற சமூக, விஞ்ஞான உலகியல் தேவைக்கேற்ப, கலை இலக்கியப் பரப்புக்களில் கால் பதிப்பதென்பதும் கவனம் கொள்ள வேண்டியுள்ளது.

கலை சமூகத்திற்காக (மக்களுக்காக)', சமூகம் அதைப் புரிந்தொழுக வேண்டுமென்பதற்காக, அதனை ஏற்று மதித்து பாதுகாக்க வேண்டுமென்பதற்காக என்ற வியாக்கியானங்களைப் புறந்தள்ளி, 'கலை கலைக்காகவே' என்கின்ற கருதுகோள்களால் தான் படைப்புகளை இனிப்பார்க்க வேண்டிய நிலையும் தவிர்க்க முடியாததாகின்றது.



யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலைவட்டக் காணுகைகள் மெச்சத்தக்கவை. பல்வேறுபட்ட கலைக்கொணர்வுகளின காலப் பதிவுகளை நிலைப்படுத்துவது உயர் கல்வி நிறுவனத்தின் உயர்ந்த பணியாகும். எம தேசத்து ஓவியச் செல்நெறியில் பல்வேறு இளையபாதங்களும், இலைமறைகாய்களும தங்கள் பாதங்களைப் பதிப்பதற்குக் கலைவட்டம் கவனம் கொள்ளுமாக. 13 ஓவியர்களுடன் பட்டியலைப் பக்குவப்படுத்தாமல் பன்முகத்தோடு இவ்வாறான பணிகளை இனியும் தொடரும் என்ற நம்பிக்கையும் வலுவாகின்றது.

*- மானியூர் ரட்ணேஸ் -*

(கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)

"ரோயல்" கம்பனியின் சிறந்த தயாரிப்பு
சுத்தமான ரோயல் ஒலிவ் ஒயில்
★ உங்கள் சருமத்தை மினு மினுப்பாக்கி மேனியைக் கவர்ச்சியுடையதாக மாற்றுகின்றது.
தோலில் வரும் வியாதிகளுக்கு சிறந்த ஒளஷதம்
PRODUCT OF SPAIN
ROYAL 100% சுத்தமான ஒலிவ் ஒயில் OLIVE OIL
PACKED BY: ROYAL Industries Colombo - 12
☎ : 0112334603
(35309)




சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

Swan
சுவான் டீசல் என்ஜின்
- நம்பிக்கையில் தலைசிறந்தது
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு



Access Graphics
ஏக முகவர்கள்:
சென்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்.
324, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை: 2324261 - 5, 2337283-5 ,பெக்ஸ்: 2446554

## சட்டவிரோத மின்பாவனை; 16 பேர் கைது!

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பணிமனையினர், பொலீஸாரின் உதவியுடன் மேற்கொண்ட திடீர்சோதனைகளின்போது சுன்னாகம் பிரதேசத்தை அண்டிய பல இடங்களில சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றுவந்த பலர் சிக்கினர்.

குறிப்பிட்ட இடங்களில் சட்ட விரோதமான முறைகளில் மினசாரம் பெறப்படுவதாக அறியவந்ததைத் தொடர்ந்தே இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றுவந்த 16 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஏழாலை, ஊரெழு, சூறாவத்தை, மயிலங்காடு மற்றும் சுன்னாகம் பகுதிகளிலேயே சோதனை நடவடிக்கை இடம்பெற்றது. கைதானவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் இவர்களை குற்றவாளிகளாகக் கண்டு - 16 பேரும் தலா 15 ஆயிரம் ரூபா குற்றப்பணமாகச் செலுத்தப்பட வேண்டும் எனத் தீர்ப்பளித்தார்.(ஒ-152)

## நியமனம்

பரிசுத்த பாப்பரசர்- 2ஆவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கைக்கான் பிரதிநிதியாக இத்தாலியைச் சேர்ந்த பேராயர் மரியோ செனரி ஆண்டகை பாப்பரசரினால் நியமிக்கப பட்டுள்ளார் இலங்கைககான பிரதிநிதியாக இதுவரை இறைபணியாற்றிய கலாநிதி தோமஸ் செங்நாண் ஆண்டகை தமது இறைபணியை நிறைவேற்றி முடித்தமையைத தொடர்ந்து அவரது பணியைத் தொடரவே பேராயர் மரியோ செனாறி ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-51)

யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்
ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு
இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35,000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.
நீங்கள் விரும்பிய நாள்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணி நேரம்.
(சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு)
முழுமையாகக் கதைக்கலாம்.
பாடநெறியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ்
இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிகள் பிரிவு,
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 222 3382
காலம் : 2 மாதங்கள்
கட்டணம் : ஆங்கிலம் 6,000/-, சிங்களம் 4,000/-
50% கழிவு
இன்று 18.08.2004 பதிவு செய்யும் அனைவருக்கும் பாடக் கட்டணத்தில் 50% சலுகையுடன் பாடக் கட்டணம் ஆங்கிலம் 3,000/-, சிங்களம் 2000/- மட்டுமே.
SAAMSTECH
மொழிக் கற்கைநெறியில் ஒரு புதிய பரிமாணம்
No.22, 1/3, Galle Road, Dehiwala,
Web.www.saamstech.com,e-mail:
salea@saamstech.com
011-5540200
(C/36769)

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

ந'கழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணி மாதம் 4ஆம் நாள் (20-08-2004) வெள்ளிக்கிழமை சித்திரை நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் நண்பகல் 12.30 முதல் 2.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருவளர் செல்வன் **ரவீந்திரன் (கனடா)** அவர்களுக்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி **கல்பனா B.A.** அவர்களுக்கும் |

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு கொக்குவில் கிழக்கு, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயக் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு.திருமதி மகாதேவா லீலா தம்பதியினர், இல.56,பூநாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு,கொக்குவில். | திரு.திருமதி குணரத்தினம் தவமணிதேவி தம்பதியினர், 11/3, சாமுவேல் ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |

(35323)(42) [இரு வீட்டார் அழைப்பு]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இரத்தினசேகரம் அசன்**

மலர்வு 10-09-1982
உதிர்வு 30-08-2003

திதி: ஆவணி பூர்வ திருதியை

எம்மை விட்டு நீர் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உமது பாச நினைவுகள் எம்மை விட்டகலாது கண்ணே!
துடிப்புடன் நடமாடும் உம் நினைவுகள் இன்றும் எம்மை
வாட்டி வதைக்குதடா.
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

77, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (35324)(34-42-19)

நீங்காத நினைவுகளுடன்:
- குடும்பத்தார்.

Dialog GSM
டயலொக் கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
kit
எந்நேரமும் உன்னுடன்..

WESTERN UNION வெஸ்டன் யூனியன்
MONEY TRANSFER பணப் பரிமாற்றல்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட எம்மை நாடுங்கள்!

பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற சகல விதமான
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட



ஸ்ரீ முருகன் SRI MURUGAN 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5392
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office E.mail del-smskr@eureka.lk Fax: 222 3435

JAFFNA CHAMBER OF COMMERCE
யாழ். வணிகர் கழகம் நடத்தும்
மாபெரும் யாழ். வர்த்தகக் கண்காட்சி-2004
ஓகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும்
இறக்குமதியாளர்களும் பங்கு பற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம்
திகதிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள்,
தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும்
இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.
-யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
(C/36735)

# சிங்கள மாணவர்களுக்கான வசதிகளில் மிகக் குறைந்தளவே தமிழ் மாணவருக்கு!

## கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் உரை



கிளிநொச்சி,ஓக.18

சிங்கள மாணவர்களுக்கு அரசு வழங்கி வருகின்ற வசதி வாய்ப்புக்களுடன் ஒப்பிடும்போது தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்கும் வசதிகள் மிகமிகக் குறைவானவையே.

-இவ்வாறு தெரிவித்தார் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்.

அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பாடசாலைகளில் முகாம்களை அமைத்து மாணவர்களின் கல்விக்கு இடையூறாக இருக்கும் ஸ்ரீலங்கா அரச படைகள், மாணவர்களைத் தமக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடவேண்டாம் என மிரட்டுகின்றனர்.

எமது மாணவர்கள் பல்வேறு வழிகளிலும் அரசினால் திட்டமிட்டு நசுக்கப்படுகின்றனர்,

கடந்த முறை தேர்வில் கடல் வளப்பாடங்கள், தொழில் நுட்பப் பாடங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் அவை எமது பகுதிகளில் சீராக இல்லை.

தமிழ் மாணவர்கள் தொழில் நுட்பப் பாடம் என்ற வகையில் விவசாயம், வர்த்தகம் ஆகிய பாடங்களையே கற்று வருகின்றனர். ஏனைய தொழில் நுட்பப் பாடங்களைக் கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அத்துடன், அவ்வாறான பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களும் தமிழர் தாயகப் பகுதிகளில் நியமிக்கப்படவில்லை.

ஆனால், 96 வீதமான சிங்கள மாணவர்கள இதனைக் கற்று வருகின்றனர். இதற்குரிய வசதி வாய்ப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் இப்பாடங்களுக்குத் தோற்றுகின்ற தமிழ் மாணவர்களின் விகிதம் மிகமிகக் குறைவாக உள்ளது. எமது ஏராளமான பாடசாலைகள் இராணுவத்தினால் அழித்தொழிக்கப்பட்டதுடன், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சில பாடசாலைகள் இயங்காதும் உள்ளன. அத்துடன், சில பாடசாலைகளில் ஸ்ரீலங்காப் படையினரின் முகாம் அமைந்துள்ளதால் அவை வேறு இடங்களில் இயங்கி வருகின்றன என்றார்.

தமிழீழக் கல்விப் பேரவை முதல்வர் பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் தமிழீழக் காவல்துறைத் துணைப்பொறுப்பாளர் மாதவன் மற்றும் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தமிழீழத் தேசியக் கொடியினையும், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை முதல்வர் பிரான்ஸிஸ் அடிகளார் தமிழீழக் கல்விக்கழகக் கொடியினையும் ஏற்றி வைத்தனர்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம், முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா, துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தேவேந்திரன், ஓய்வுபெற்ற முல்லை வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சரவணபவன் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(4-201)

## பிரதேச சபைகளின் அலுவலகம் புனரமைப்பு

ஒட்டுசுட்டான்,ஓக.18

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேச சபை அலுவலகம் மற்றும் நயினாமடு உப பிரதேச சபை அலுவலகம் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வடக்கு, நெடுங்கேணியில் அமைந்திருந்த பிரதேச சபை மற்றும் நயினாமடுவில் உள்ள உப பிரதேச சபை அலுவலகம் என்பன 1997ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது முற்றாக அழிக்கப்பட்டிருந்தன.

தற்போது 30ஆயிரம் ரூபா செலவில் பிரதேச சபை அலுவலகமும் 25ஆயிரம் ரூபா செலவில் உபபிரதேச சபை அலுவலகமும் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன. (4-7-341)

## பற்றைகள் மூடியநிலையில் பாடசாலை வீதி

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு திருநகர், கனகபுரம், கிளிநொச்சி தெற்கு ஆகிய பிரதேசங்களில் இருந்து மாணவிகள் சென்றுவருகின்ற கணேசபுரம் வடக்கு வீதி (செட்டித்தெரு) மீள்குடியேற்றத்தின் பின்னர் திருத்தப்படாது பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுகிறது. இதனால், மாணவர்கள் கல்லூரிக்குச் சென்று வருவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-301)

## மாபெரும் விவசாயக் கண்காட்சி அடுத்த மாதம் வட்டக்கச்சியில்

கிளிநொச்சி,ஓக.18

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம் ஆகியன இணைந்து வன்னியில் மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளன.

வட்டக்கச்சியிலுள்ள ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை இக் கண்காட்சி நடைபெறும்.

விவசாயிகள் தங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும் மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும், சிறந்த தொழில்நுட்ப முறைகளை கண்டறிவதற்கும் இக்கண்காட்சியைப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்கைமுறையாலும் ஒளிப்பட மற்றும் புகைப்படக்காட்சிகளுடனும் திட்டவிளக்கவுரைகளுடனும் இக்கண்காட்சியை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும் விற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)




## முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்

ஒட்டுசுட்டான்,ஓக.18

ஒட்டுசுட்டான் பிரதேச மட்டத்திலான 28 முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன பாடசாலையில் கடந்த 3ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றன.

முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுடர்களை கூழா முறிப்பு கிராமசேவை அலுவலர் க.பாலசுப்பிரமணியம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய முதல்வர் த.பங்கையச்செல்வன், முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் செல்வி க.கிருபசஞ்சினி ஆகியோர் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியினை கற்சிலைமடு கிராமப் பொறுப்பாளர் கதிர் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை விளையாட்டுக் குழுத் தலைவர் ஆ.திருநாவுக்கரசு, அகதிகள் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மாங்குளம் அபிவிருத்தி நிறுவனக் கொடியினைத் திருச்செல்வம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்பள்ளிக் கொடியினை சிறார்களின் பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் த.பங்கயற்செல்வனின் ஆசிச் செய்தியுடன் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின. போட்டியில் வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

(4-341)

## தண்ணீர்.... தண்ணீர்....!



பரந்தன்,ஓக.18

ஏ-9 வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து 162 ஆம் கட்டையில் உள்ள உமையாளபுரம் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால், அவர்கள் தண்ணீருக்காக மிகுந்த சிரமப்படுகின்றனர்.

குடிதண்ணீர் பெறுவதற்காகவும் குளிப்பதற்காகவும் தனியார் ஒருவரின் கிணற்றடியில் காத்திருக்கும் மக்களையே படத்தில் காண்கிறீர்கள்.

தமது இந்த அவலநிலை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எடுத்துக்கூறியும் இது வரை எதுவித பயனும் கிட்டவில்லை என்று இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

(4-352)

## புளியங்குளம் மருந்தகம் புனரமைக்கப்படுகின்றது

ஒட்டுசுட்டான், ஓக.18

போர் காரணமாக அழிக்கப்பட்ட புளியங்குளம் மத்திய மருந்தகம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

1997ஆம் ஆண்டு படையினர் மேற்கொண்ட 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது இந்த மருந்தகம் முற்றாக அழிவடைந்தது.

தற்போது இந்த மருந்தகத்தினை புனரமைப்பதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

புளியங்குளம், சன்னாசி, பரந்தன், மதியாமடு, நயினாமடு, சின்னடம்பம், ஆயிலடி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த 7 வருடங்களாக மருந்தகம் ஒன்று இல்லாமையினால் வவுனியா சென்றே சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (4-7-341)

## கண்டாவளைக் கால்நடைகளுக்கு கால்வாய் நோய்த் தடுப்பூசி

பரந்தன்,ஓக.18

கண்டவாளைப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள உழவனூர் கிராமத்தில் சுமார் 200 மாடுகளுக்கு முதற்கட்டமாக கடந்த 6ஆம் திகதி தடுப்பூசி ஏற்றப்பட்டது.

தற்போது ஏற்பட்டிருக்கும் காலநிலை காரணமாக இப்பகுதியில் கால்வாய் நோய் பரவக்கூடும் என்ற அச்சத்தினால் கிளிநொச்சி கால்நடை அபிவிருத்தி சுகாதார சேவையினரால் கால்நடைகளுக்கான கால்வாய் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும், இந்நடவடிக்கை ஏனைய கிராமங்களிலும் தொடர இருப்பதாகவும் கண்டாவளைப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் காசிநாதன் தெரிவித்துள்ளார். (8-352)

## கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள்

விசுவமடு,ஓக.18

கண்டாவளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கோட்ட மட்டத்திலான தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகளின் ஒருதொகுதி கடந்த 13 ஆம் திகதிய உதயனில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.

**பிரிவு - II**

**பா ஓதல்**

1ஆம் இடம் - இ.அனுஷா (முருகானந்தா ம.வி.), 2ஆம் இடம் - ம.மாதுரி (பெரியகுளம் ஐயனார் வித்தி.).

**ஆக்கம் - எழுத்து**

1ஆம் இடம் - த.கோபிதா (முருகானந்தா ம.வி.), 2ஆம் இடம் - வைபிரகாசினி (கலவெட்டித் திடல் நாகேஸ்வரா வித்தி.), சி.லோஜினி (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை).

**பேச்சு**

1ஆம் இடம் - பூ.யோகினி (கலவெட்டித் திடல் நாகேஸ்வரி வித்தி.)

**வாசிப்பு**

1ஆம் இடம் - அ.சகாயராணி (இராமநாத புரம் கிழக்கு அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம்- சி.சாரங்கனி (கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தி.), 3ஆம் இடம் -ம.ரோசி (தருமபுரம் ம.வி.).

**நடனம் (தனி)**

1ஆம் இடம் - கு.பிரவிந்தி (முருகானந்தா ம.வி.), 2ஆம் இடம் -அ.தர்சிகா (தருமபுரம் ம.வி.).

**இசை (தனி)**

1ஆம் இடம் - பா.அன்பரசி (முருகானந்தா ம.வி.), 2ஆம் இடம் - வ.அகிலா (பிரமந்தனாறு ம.வி.), 3ஆம் இடம் - இ.தனுஷா (இராமநாத புரம் கிழக்கு அ.த.க.பாடசாலை)

**பிரிவு -III**

**பா ஓதல்**

1ஆம் இடம் - க.தர்சினி (பரந்தன் இந்து ம.வி.), 2ஆம் இடம் - கு.சயந்தி (புன்னைநீராவி அ.த.க.பாடசாலை), ம.பிருந்தா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை).

**எழுத்து ஆக்கம்**

1ஆம் இடம் - இ.நிசாந்தினி (நாகேந்திரா வித்தியாலம்), 2ஆம் இடம் - வ.வினோஜா (முருகானந்தா ம.வி.), 3ஆம் இடம் - செ.சயந்தினி (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை).

**பேச்சு**

1ஆம் இடம் - ந.தயாழினி (புன்னைநீராவி அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம் - இ.நிரோஜன் (நாகேந்திரா வித்தியாலயம்).

**நடனம் (தனி)**

1ஆம் இடம்- சி.சுலக்சனா (கண்டாவளை ம.வி.) 2 ஆவது இடம்- ர.பிரியதர்சினி (பரந்தன் இந்து.ம.வி.)

**இசை (தனி)**

1ஆம் இடம் - ம.லோஜிதா (கண்டாவளை ம.வி.) 2ஆவது இடம் - க.ஜனகன் (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை)

(வளரும்)

# குரங்கால் வந்த வினை

சாவகச்சேரி ஏ-9 பிரதான வீதியில் கல்லடி மூட்டுச் சந்திக்கு அண்மையில் வீதியில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் மீது குரங்கு ஒன்று பாய்ந்ததில் அவர் நிலைதடுமாறி வீழ்ந்து காயமடைந்தார். கடந்த ஞாயிறு பிற்பகல் 5மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.புஸ்பராசா என்பவரே முகத்தில் காயமடைந்தார்.

இந்த விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள ஆடியம்பிட்டி ஒழுங்கையில் மின்சாரம் தாக்கி குரங்கு ஒன்று இறந்து கிடந்தது. இதனையடுத்துப் பல குரங்குகள் அப்பகுதியில் இறந்து கிடந்த குரங்கைச் சுற்றி அலைந்தன. அந்த வேளையிலேயே ஆவேசமாக வந்த குரங்கு வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மீது பாய்ந்து விபத்தை ஏற்படுத்தியது.

இதேவேளை இவ்விபத்தை நேரில் பார்த்த சைக்கிள் பயணி ஒருவர் வேறொரு மோட்டார் சைக்கிளுடன் மோதிக்கொண்டதில் சைக்கிள் சேதமானது. (ஒ-31-117)

## தொழில்நுட்ப மாணவருக்கு!

உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின அனைத்துப் பாடங்களுக்குமான இறுதி வருடப் பரீட்சைகளை செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் நடத்த இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்படி பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்கள் தமது தகவல்கள் அடங்கிய வரவு அறிக்கையின் பூரணப்படுத்தப்பட்ட இரு பிரதிகளை இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-6)

**MATHS CENTRE**
**Nelliady**

**A/L - 2005**
**DAY CLASS**

கலை, வர்த்தக வகுப்புகள்
வழமையான ஆசிரியர் குழு

- Agricul. - பிரபல ஆசிரியர்.
- Drama - பிரதீபன்
- Acc. - ஜெயகணேஸ்

*ஆரம்பம்:- 23.08.2004 (திங்கள்)*
*a.m. 7.00 (ப.நே)*

(C/36767) (43-21-12)

சிவமயம்

**விற்பனையாளர்கள் தேவை**

இரும்பு வியாபாரத்தில் அனுபவமுள்ள, பழக விரும்புபவர்களும் தேவை. சம்பளம் நேரில்பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு: விளம்பர இல.2350,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(35356)(42-12-21)

**ஈசன் கல்வி நிலையம்**

**A/L 2005 DAY CLASS**
வர்த்தகப் பிரிவு

Eco..: K.உதயன்: Tue., Thu., 7.00 a.m.
Acc.: D.SAM Mon.,Wed., Fri. 7.00 a.m
B.St.: B.பசில்: Mon.,Tue.,Wed, Thu., Fri 8.30 a.m.

**ஆரம்பம்:19.08.2004 THU.:7.00 a.m. (S.L.T)**

தொழில்சார் அரங்கத் திட்டம்
Professional Theatre Project

# அபிவிருத்திக்கான அரங்கு

**Theatre for Development**

செயல்திறன் அரங்க இயக்கம் சமுதாய அபிவிருத்திக்கான அரங்கச் செயற்திட்டங்களைக் கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது. தற்போது இத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆளணி வளத்தை அதிகரிப்பதற்குப் புதிய பயிற்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.



**ஆரம்பிக்கப்படவுள்ள புதிய பயிற்சிநெறிகளின் விவரம்**

☆ சிறுவர் அரங்கு **Children Theatre**
☆ சமுதாய அரங்கு **Community Theatre**

பயிற்சிக்காலம் - நான்கு மாதங்கள்
பயிற்சி முடிவில் சிறப்பாகச் சித்தியடைவோர் எமது நிறுவனத்தில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் மாதாந்தம் ரூ. 6000/- கொடுப்பனவில் நியமிக்கப்படுவர்.
பயிற்சிக் காலத்தில் போக்குவரத்துக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

*பயிற்சி நெறியில் பங்குகொள்வோரிடமிருந்து வேண்டப்படும் தகுதிகள்:*

☆ G.C.E. A/L சித்தியடைந்திருத்தல்
☆ நாடகத்துறைசார் அனுபவம்/ஆர்வம்
☆ நாடகமும் அரங்கியலும் பாடத்தை G.C.E. A/L, வட இலங்கை சங்கீதசபை, பல்கலைக்கழகப் பரீட்சைகளில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
☆ வயதெல்லை 20-35 (ஆண், பெண் இருபாலாரும்)

பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் உரிய ஆவணங்களோடு, 21.08.2004 (சனி) காலை 10 மணிக்கு தெரிவிற்காக நடைபெறவுள்ள களப்பயிற்சியில் பங்குகொள்ளலாம்.

*மேலதிக விவரங்களுக்கு* காலை 9.00மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை பின்வரும் முகவரியில் உள்ள எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளலாம்.

*தொடர்பு முகவரி:* **செயல்திறன் அரங்க இயக்கம்**
Active Theatre Movement
"அருளகம்" ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

(சி-36596) (26-12-21)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**இராசையா குலசிங்கம்**

இரத்தினம் பத்தர் (சம்பந்தர் கடை)

அன்னை மடியில் 21-11-1931 — ஆண்டவன் அடியில் 30-08-2003

திதி : பூர்வபக்க திருதியை

கடந்த 30.08.2003 ஆம் ஆண்டு சிவபதமடைந்த இராசையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் எமது குடும்பத் தலைவருமாகிய அமரர் இராசையா குலசிங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு *இன்று (18.08.2004) புதன்கிழமை* முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மாலிசந்தி,*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/36776)(21-12-22)

# இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இலக்கம் - 2880 சி.இ.
### தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
### (சிறிய குடிசார் வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

**ஐ.எவ்.பி.இல: ஜேஏ/நீர்ப்/சீஎல்ஜி/சீபி/05 திகதி 16-08-2004**

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரரிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

**நம்பிக்கையின் கீழான வசதி (IDA)**

2. மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் வேலைத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

**விவர அட்டவணை**

| ஐ.எவ்.பி இல | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி / சிபி/05 | மின்சாரம், நீர்க்குழாய் பொருத்தல், தண்ணீர்த் தாங்கி திருத்தல் போன்ற மேலதிக வேலைகள் - பிராந்திய உ.உ.ஆணையாளர் அலுவலகக் கட்டடம், யாழ்ப்பாணம். | 25,000.00 | 500.00 | 02 மாதங்கள் |

3. **அட்டவணை:**

3.1. மீளளிக்கப்படாத கட்டணமாக காட்டப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ். மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) அல்லது தபால் அலுவலகத்தில் பெறப்பட்ட காசுக்கட்டளையாகவோ (Money Order) மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 16-09-2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

3.2. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021-2222654 தொலைநகல் இல. 021-2223410

4. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 45 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையையும் கேள்விகளுடன் இணைத்து அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 17-09-2004ஆம் திகதி பிற்பகல் 15.00மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாள் அன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

5. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் 3ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளில் ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்விப்பத்திரத்தில் உள்ள ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பதும் ஒரு தனி ஒப்பந்தகாரருக்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-36774) (26-21-12)

# சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டுள்ளன

## சிலை திறப்புவிழாவில் பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம்,ஓக.18

சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் எமது பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக்காட்டுபவையாக உள்ளன.

- இவ்வாறு பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.

நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் திருஉருவச்சிலை திறப்புவிழாவில் சிறப்புரையாற்றுகையிலேயே பேராசிரியர் சண்முகதாஸ் இவ்வாறு கூறினார். வித்தியாலய அதிபர் பு.ஶ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் நடந்த விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் மேலும் கூறியதாவது:-

எமது பண்பாட்டுக்கூறுகளை எமக்கு எடுத்துக் காட்டுபவையாகச் சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் அமைந்துள்ளன. விவசாயிகளுக்குத் தை மாதமும் ஆடி மாதமும் முக்கியமானவையாகையால் தைப்பொங்கல் பற்றியும் ஆடிப்பிறப்புப் பற்றியும் பாடி உள்ளார். தை மாதத்திலே நெல்விளைந்த மகிழ்ச்சியில் சூரியனுக்கும், எருதுகளுக்கும் நன்றி தெரிவிப்பதாகத் தைப்பொங்கல் நிகழ்வைப் புலவர் சித்திரிக்கின்றார். அதேவேளை, ஆடி மாதத்திலே நெல் இருப்புக் குறைந்துபோக மீண்டும் வயல் வேலைகளை ஆரம்பிக்க நினைவூட்டும் பாடல்களாக ஆடிப்பிறப்புக்கு நாளை விடுமுறை என்ற பாடல்களும் அமைகின்றன.

புலவர் பாடிய ஆடிப்பிறப்புக்கு நாளை விடுமுறை, கத்தரித்தோட்டத்து வெருளி, திருமலை வெந்நீரூற்றுப் பற்றிய பாடல்கள் மிகப் பிரசித்தமானவை எனக் கூறினார்.

புலவரின் உருவச்சிலையைத் திறந்து வைத்துப் பேசிய, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கூறியதாவது:-

நல்லதைச் செய்தவர்கள் ஒருபோதும் தோற்றுப்போனதில்லை. சோமசுந்தரப்புலவர் நல்லவற்றைச் செய்தார். அவர் தோற்றுப் போகாத நிலையில், மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பதையே இன்றைய சிலை திறப்பு விழா எடுத்துக்காட்டுகிறது.

உலகம் போற்றும் தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவருக்கு நவாலி மக்கள் இன்று உரிய கௌரவம் அளித்துப் பெருமை சேர்த்துள்ளனர். நன்றியை மதித்தாலே நாடு உருப்படும். நாம் நன்றியை மறந்தமையால் தான் எமக்கு இன்று எத்தனையோ துன்பங்கள் ஏற்பட்டுள்ளன.

தமிழை எத்தனையோ கவிஞர்களும், புலவர்களும், கல்விமான்களும் இனிமை செய்துள்ளனர். தமிழுக்குத் தொண்டு செய்துள்ளனர். ஆனால், பாமரமக்களுக்குப் புரியும் மொழியில் இலகுதமிழில் பாடல்களைப் பாடி சோமசுந்தரப்புலவர் மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடித்துள்ளார் - என்றார்.



வாழ்த்துரை வழங்கிய வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் -

தமிழ் உள்ளங்களில் எழுச்சி உணர்வுகளை வளர்த்தவர் தங்கத்தாத்தா. நவாலி மண்ணில் பிறந்த அனைவரும் உயர்நிலை அடைய வேண்டும் என அவர் விரும்பினார். அவரது சிலையைக் கடக்கும்போது மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

இன்று திறந்துவைக்கப்பட்டுள்ள சிலைக்குப் பெறுமதியான ஒரு கட்டடத்தை எனது சேவைக் காலம் முடியமுன்னர் கட்டுவதற்கு ஏற்ற வழி செய்வேன். அதற்குக் கல்விமான்களும் பெரியோர்களும் பூரண ஒத்துழைப்புத் தர வேண்டும் - என்றார்.

விழாவிலே சிறப்புரையாற்றிய கவிஞர் சோ. பத்மநாதன் -

சோமசுந்தரப் புலவர் காலத்தின் பின்னர் தான் எளிமையான, இனிமையான சந்தம் அமைத்துப் பாடும் மரபு ஏற்பட்டது. இலகு கவிதைகள் எழுதி, தன் கவிதைச் சிறப்பைக் அவர் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், பொருளாதாரத் தடை நீங்கிய பின்னர் எமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் யாவும் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பொருத்துவதிலும் கணனி மயப்படுத்துவதிலும் அக்கறை காட்டிவருகின்றன. சோமசுந்தரப் புலவர் போல தமிழுக்குத் தொண்டாற்றிய பெரியார்களை நினைவு கூர வேண்டும். தமிழையும் தமிழ்ப் பண்பையும் நிலைநிறுத்தும் வகையில் அமைந்த இன்றைய நிகழ்வு பாராட்டத்தக்கது - என்றார்.

புலவரின் சிலையை உருவமைத்த கலைஞர் தில்லைநாதன் சந்திரகுமார் "சிற்பக் கலைமணி" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கவிஞர் சோ.பத்மநாதன் சிற்பக்கலைஞன் சந்திரனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

யாழ். மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலன் சிற்பக்கலைஞருக்கு மலர்மாலை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ப-152-185)

# பொருளாதார அச்சுறுத்தலை ஈடுசெய்யும் நூல்கள் வெளிவருவது பாராட்டத்தக்கது

## வேளாண் நூல் அறிமுக விழாவில் இளம்பரிதி



யாழ்ப்பாணம்,ஓக.18

பொருளாதார ரீதியிலான அச்சுறுத்தல்களை ஈடுசெய்யும் வகையிலும் விவசாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும் பல விடயங்களை உள்ளடக்கியதாக நூல்கள் வெளிவருவது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற விவசாய பீடாதிபதி சு.இராசதுரையின் வேளாண் நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சமூக பொருளாதார விடுதலைக்காகப் போராடும் தேசம் எமது தேசம். பொதுவாக ஓர் இனத்தின் பொருளாதார வளத்தை அழிப்பதன் மூலம் அந்த இனத்தை அழிப்பதற்குரிய முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படும். அந்த வகையிலேயே எமது பொருளாதார வளத்தையும் அழிப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள் மூலம் எமது பொருளாதாரவளம் பாதிப்புக்குட்பட்டதேயன்றி முழுமையாக அழிக்கப்படவில்லை.

நமது நாட்டில் பல்வேறு துறைகளில் எமது மக்கள் வளர்ச்சி பெற்றுள்ளபோதிலும் விவசாயத்திலும் முழுமையான வளர்ச்சிக் கட்டத்தை எய்தவில்லை. அந்நிலையில் விவசாயம் பற்றிய அறிவு ரீதியான நூலாக இது வெளிவருவது சிறப்பானதாகும்.

விவசாயத்தை மேற்கொள்வதன்மூலம் நாட்டுக்கு அபிவிருத்தி ஏற்படும். சூழல் பாதுகாக்கப்படும். அத்துடன், விடுதலை முன்னெடுக்கப்படும்போது பேணப்படவேண்டிய விவசாயக் கட்டுமானம் இதன்மூலம் பேணப்படுகின்றது. இச்செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் விவசாயிகள் விவசாயம் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டியது மிகமிக அவசியமாகிறது.

இந்நிலையில் விவசாயம் பற்றிய அறிவு பொறிமுறைசார் நுட்பங்களை விவசாயிகள் மட்டத்தில் புகுத்தும் நூல்களாக இவை அமைந்திருப்பது எமது இனத்தினால் வரவேற்கத்தக்க தொன்றாகும்.

மேலும் விவசாயப் பொருள்களின் உற்பத்திக் களமாக வன்னியும் அவற்றைச் சந்தைப்படுத்தும் களமாக யாழ்ப்பாணமும் உள்ளன. இதன் காரணமாக விவாசாயபீடமானது முன்பு கிளிநொச்சியிலேயே இயங்கிவந்தது. பின் நாட்டில் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலை காரணமாகத் தற்போது இப்பீடம் யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகிறது. இதனைப் பீடாதிபதி அவர்கள் உயிர்போலக் காத்துவருகின்றார். அத்துடன் இப்பீடம் மீண்டும் கிளிநொச்சியில் இயங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் விதத்தில் ஒரு தூண்டுகோலாக இத்தகைய வெளியீடுகள் அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும். இவ்வகையில் விவசாய பீடாதிபதி சு.இராசதுரை வரலாறு வாழ்த்தும் பேராசிரியராக எமது இயக்கத்தினாலும் மக்களாலும் பாராட்டப்படத்தக்க முக்கிய பெருமனிதராவார் என்று தெரிவித்தார்.

நிகழ்வில் அறிமுக உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தமது உரையில் -

எமது பிரதேச மண் பல வழிகளில் நேசிக்கப்படுகின்றது. எம்மில் பெரும்பாலானவர்கள் என்ன தொழிலைச் செய்தாலும் எமது வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச்செய்கையைச் சிறிதளவிலேனும் மேற்கொள்வதன் மூலம் நாம் அனைவரும் விவசாயிகளாகவே இருக்கின்றோம். சந்தையில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்தடிக்கப்பட்ட காய்கறிகளை வாங்குவதை விடுத்து எமது வீட்டுத்தோட்டத்தில் உருவாக்கப்பட்ட காய்கறிகளை நாம் உண்பது எமக்கு நோயை ஏற்படுத்தாது சக்தியையும் தருகின்றது. அந்தவகையில் நாம் அனைவரும் வீட்டுத் தோட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ளோம். இவ்வகையில் முக்கியம் பெறுகின்ற விவசாயத்துறை சார்ந்த புத்தகங்கள் வெளியிடப்படுவது நன்முயற்சியாகும். அந்த வகையில் விவசாய பீடாதிபதியின் வேளாண் நூல்கள் எமது மண்ணில் எவ்வகைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன, எந்தப் பயிருக்கு எந்த மருந்து உகந்தது, அதனை எவ்வாறு அடிக்கவேண்டும், விவசாயப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு எத்தனை நாள்களுக்கு முன் மருந்து விசிறுவது நிறுத்தப் படவேண்டும் என்பன போன்ற அறிவியல் ரீதியான பல விளக்கங்களைக் கொண்டமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும் - என்றார்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறைப் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) தமது தலைமையுரையில் விவசாயமானது மருத்துவம், பொருளாதாரம் ஆகியவற்றுடன் மட்டுமன்றி அரசுடனும் சம்பந்தப்பட்டது. நாட்டில் பசுமைப்புரட்சி ஏற்படும்போது நாட்டின் அரசியலில் பாதிப்பு ஏற்படுகின்றது என்று கூறினார்.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக நல்லாயன் தேவாலயக் குருமுதல்வர் வண. பிதா ஏ.ஜ.பேர்னாட் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக வேந்தர் ம.சிவசூரிய, துணைவேந்தர் சு.மோகனதாஸ் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ப-201-202)




# பரதக்கலை மனதுக்கு மகிழ்ச்சியையும் ஆன்மீக பலத்தையும் தரும் மருந்து

## அரங்கேற்ற விழாவில் நீதிபதி வரதராசா



யாழ்ப்பாணம்,ஓக.18

பரதக் கலையானது மனதுக்கு மகிழ்ச்சியையும் அழகையும் தருவது மட்டுமன்றி ஆன்மீக பலத்தையும் தருகின்றது என்று கூறினார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராசா.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற செல்வி டயானர்த்தி அருமைநாயகத்தின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மேல்நீதிமன்ற நீதிபதி வரதராசா உரைநிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய மேல்நீதிமன்ற நீதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

பரதநாட்டியக் கலையானது லோகமார்க்கத்துக்கு வழிகாட்டியாக - லோகசாதனமாக இருப்பதால்தான் தொன்றுதொட்டுப் பூமியின் ஓர் அங்கமாக இருந்து நிலைத்து வருகின்றது. இக்கலை மகிழ்ச்சியையும் அழகையும் தருவதுடன், ஆன்மீக பலத்தையும் அளிக்கவல்லது - என்றார்.

இக்கலை பெண்களுக்கு மட்டுமன்றி ஆண்களுக்கும் உரியதாகும். எனவே, இளவயதினர் இதனை முழுமையாகக் கற்று, அனுபவித்து ஆன்மீகத்தையடைய முற்படுவதுடன், அடுத்த சந்ததிக்கும் இக்கலையைக் கொண்டு செல்லும் வகையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

அவர் மேலும் பேசுகையில், ஆடற்கலை வல்லானாகச் சிறப்பிக்கப்படும் நடராஜர் 108 கரணங்களைச் சாஸ்திர ரீதியாக வெளிப்படுத்தி, பரதக்கலைக்குச் சிறந்த அந்தஸ்தைக் கொடுத்தவர் என நாம் அறிந்துள்ளோம். தற்காலத்தில் அதிலிருந்து வேறுபட்ட வகையில் இளவயதினர் மோட்டார் சைக்கிள்களில் வலம்வந்து கரணமடித்து, அதனால் கபாலமோட்சம் அடைந்துகொள்வதையும் எம்மால் உணரமுடிகின்றது - என்றார் நகைச்சுவையாக.

யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பேசுகையில் -

பரதக்கலையில் கொண்ட ஆர்வம் காரணமாக ஆங்கில மொழிமூலம் இதன் விளங்கங்களைக் கற்றுச் சிங்கள மாணவர்கள் பலரும் வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளில் தற்காலத்தில் தோற்றிவருவதை அவதானிக்க முடிகிறது.

மேலும் யாழ்.பல்கலைக்கழகம் இத்துறையில் பட்டக்கல்வி, பட்டமேற்கல்விகளை வழங்கி வருவது பாராட்டத்தக்கது - என்றார்.

பரதக்கலை உடல், உள ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்ற உன்னத மருந்து என நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தே. இராஜரட்ணம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி இரவீந்திரா, பரதநாட்டியம் கடல் போன்றது. நமது பண்பாட்டில் ஆடற்கலைக்கு உயர்ந்த இடம் உள்ளது. நடனக்கலைஞர், அபிநயம், அங்கசுத்தம், பாவம், ராகம், தாளம் போன்றவற்றில் அதிக கவனஞ்செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

நிகழ்வில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்பாடி வசித்த யாழ்.மண்ணில் இதுபோன்ற கலைகள் வளர்க்கப்படுவது தமிழ்மக்களுக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும் - என்றார்.

மேலும் இறைவனின் விசேட படைப்பாளிகள், கலைஞர்கள் ஆகியோர் இறைவன் அளித்த கொடையை முறையாகக் கற்று வெளிப்படுத்துபவர்கள். சமாதானம், அவதானம், நிதானம் ஆகியவற்றுடன் உடலையும் உள்ளத்தையும் வலுப்படுத்தி அர்ப்பணிக்கப்பட வேண்டிய ஒரு கலையாக பரதக்கலையைக் காண முடிகிறது என நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்செல்வி ஈ.செல்வராணி தெரிவித்தார்.

நிகழ்வில் மகாதேவாக்குருக்கள் சோமசுந்தரசர்மா அவர்களது ஆசியுரைகளும் இடம்பெற்றன. பல கலைஞர்களும் பொதுமக்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ப-201)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பொமேரியன் நாய்களும், குட்டியும் Percian Cat (சடைப்பூனைக்குட்டி ஆண், பெண்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுட்டி, வட்டுக்கோட்டை. (35361)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பகப்பிள்ளையார் ஒழுங்கையில், கணேசா சனசமூக நிலையத்துக்கு அண்மையில் 6½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. கூடிய விலை கேட்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு: திருமதி ப.சர்வேஸ்வரன், சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு,
T.P. 0776 087538. (35296)

யாழ்.நகருக்கு உட்பட்ட பகுதியில் OLR சேச் அருகில் 3½ பரப்பளவு கொண்ட வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் இன்றித் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 - 7193, 0776192347 (35343)

## வீடும் காணியும் விற்பனைக்கு

வல்வை வீதி, 1ஆம் கட்டை தொண்டமானாறில் உள்ள 12 பரப்பு தோட்டக்காணியும், 2 பரப்புக் காணியுடன், வீடும், கிணறும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கதிரவேலு செல்வரத்தினம், 15ஆம் கட்டை (வடக்கு), உடுப்பிட்டி T.P. 226 3446. (35371)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில் திக்கில் கந்தசுவாமி கோயில் வீதிக்கும் பிரதான வடிகாலுக்கும் இடையில் அமைந்துள்ள இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr.க.வே.துரைராசா, 29, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர். (35378)

## தவறிவிட்டது

கிறிஸ்துராசா மேரி ஜெயரஞ்சினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கடந்த 05-08-2004 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் முனியப்பர் கோயிலடிக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 45, புதிய கடற்கரை வீதி, தண்ணீர்த் தாங்கியடி, குருநகரைச் சேர்ந்த A/69 இலக்க கிராமசேவையாளரிடம் ஒப்படைத்து உதவவும். (35338)

நவராணி சுந்தரேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.627063601V), ஈஸ்வரதாஸ் சுந்தரேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.61050325V) என்பன கடந்த 06-08-2004 வெள்ளிக்கிழமை யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 34, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.(35344)

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1961, விசாகம், 2ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய், சுயதொழில் புரிபவருக்கும்; 1963, கார்த்திகை, 3ஆம் பாதம் செவ்வாய்க்குற்றமற்ற பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் மணமகள்கள் தேவை. தொடர்பு: இல.2351, மே/பா உதயன். (35383)

## தேவை

நல்லூர்ப் பகுதியில் (ஆண்) ஒருவருக்கு அறை வாடகைக்குத் தேவை. வாடகை விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.
T.P.0777238378. (35345)

## சாவகச்சேரியில் இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஓக.18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி கச்சாய் வீதி, பெரியமாவடி, அல்லாரை, சங்கத்தானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி சப்பச்சிமாவடி சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தில் நடத்தப்படவுள்ள இந்த மருத்துவப் பரிசோதனையில் கண், இரத்த அமுக்கம், நீரிழிவு, பெண்நோயியல், தொழு, வாய்ப்புற்று, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படுமென கழகச்செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (8-117)

## பளைக் கல்வி கோட்டத்திற்கு புதிய அதிகாரி

பளை கல்விக் கோட்டத்திற்கான கோட்டக்கல்வி அலுவலராக பளை வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை அதிபர் சின்னத்துரை இராமலிங்கம் கடந்த 11ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டக் கல்வி அலுவலராகக் கடமையாற்றிய அ.கயிலாயபிள்ளை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து கோட்டக்கல்வி அதிபராக சி.இராமலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி மகாவித்தியாலய அதிபர் எஸ். மொறாயஸ் வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (8-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய

### திரு.சின்னத்துரை இராமலிங்கம்

அவர்கள் 11-08-2004 தொடக்கம் பளைக் கல்விக் கோட்டத்தின் கோட்டக்கல்வி அலுவலராகப் பதவியுயர்வு பெற்றமையை நாம் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பளைக் கோட்டம்,
பளை.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(சி-36783) (26-21-15-19)

## குருமார்களுக்கான கும்பாபிஷேகப் பயிற்சி வகுப்பு

சைவக்குருமார்களுக்கான கும்பாபிஷேகக் கிரியை பற்றிய பயிற்சி வகுப்பு 16.08.2004 திங்கட்கிழமை முதல் கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது. சைவக்குருமார்கள் கலந்துகொள்ளவும். எமது பேரவையின் பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ கை.நமசிவாயக்குருக்கள் சிவப்பேறு அடைந்தமையையிட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த சமஸ்கிருத வகுப்பு மீண்டும் வழமைபோல் 21.08.2004 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.


குறிப்பு:

25, 26-7-2004 ஆம் திகதிய உதயனில் தசாகக் கிரியையும், சபண்டீகரண அழைப்பும் எனும் தலைப்பில் பீடாதிபதி சைவக் குருமார் அர்ச்சகர்சபை எனத் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டதை அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை என வாசகர்கள் திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சிவஸ்ரீ.க.சோமசுந்தரக்குருக்கள்,
செயலாளர்,
அனைத்துலக சைவக் குருமார்
அர்ச்சகர்கள் பேரவை.

சிவகிரி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (35309) (21-42-15-19)

## முதலாம் ஆண்டு அஞ்சலி



அமரர்

### தம்பிஐயா குணபாலசிங்கம் (J.P.)

திதி: (18.08.2004)

தோற்றம் 22.02.1939 — மறைவு 28.08.2003

*நற்குண சீலனாகி நாடுயர் சேவையாற்றி*
*முற்படு வைத்தியனாய் முனைந்த நோய் அனைத்தும் நீங்கி*
*சொற்படு தெய்வமாகத் துதித்திடும் நாகவரதக்*
*கற்பகக் கண்ணன்பாதம் கருத்துயர் தொண்டனாய்*
*இரவொடு பகலாய் நாலாயிரப் பதிகங்கள் பாடத்*
*திருமகள் நாதன்பாதம் சேர்ந்தனை ஐயா உந்தன்*
*உருவத்தை எண்ணிஎண்ணி உள்ளம் நொந்தறுகின்றோம்*
*பெருமை சேர் நின்சீரான்மா பெருஞ்சோதியாக வாழி!*

'திருவருள்'
நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(35385) (24-21-15-19)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்
### நோயாளர் சேவைக்கு ஆள்சேர்ப்பு

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடத்தப்படும் நோயாளர் சேவைக்கு ஆள்கள் (ஆண், பெண் இருபாலார்களும்) தேவை. இதற்கான ஊக்குவிப்பு தொண்டர் கொடுப்பனவாக நாள் ஒன்றிற்கு ரூபா 220/- இலிருந்து ரூபா 250/- வரை வழங்கப்படும். இச்சேவையில் சேரவிரும்புபவர்கள் 22-08-2004 ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு சமுகம்தரவும்.

பிரதம ஆணையாளர்
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
தேசிய தலைமையகம்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ்.போதனா வைத்தியசாலை
தொலைபேசி இல. 222 3166

(35370) (26-19-15)

## கண்ணீர் அஞ்சலி



தீவகத்தின் செம்மலாய் - பசுமைப் புரட்சியின் பக்தனாய்
நீர்வளத்தைப் பேணும் நெறியாளனாய் வட இலங்கை
சர்வோதயத்தின் ஆலோசகராய் மக்களின் பெருமைமிக்க
சேவையாளராய் வாழ்ந்து 16-08-2004 இல்
இறைபதமெய்திய

### உயர்திரு. செ.இரத்தினம்

(முன்னாள் பிரதேச செயலர் - தீவகம் தெற்கு)

அவர்களின் மறைவு எமக்கு ஆழ்ந்த கவலையளித்துள்ளது. அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா யோகசுவாமிகளின் பாதங்களை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

வடஇலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.

(35366) (21-19-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெலஸ்போ மேரிவதனா (மைனா)

உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலய பங்கைச் சேர்ந்த திருமதி தெலஸ்போ மேரிவதனா 15-08-2004 ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் தெலஸ்போ (பூராசா) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற யேசுதாஸ், ஞானதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், டேவிற் பிரதீப், அன்ரனி நிமல்ராஜ், அன்ரனி பிறேம்ராஜ், மேரி மெக்சலா, அனிற்ரா, கிறிஷ்ரின் லெனின் (ரூபன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாயிரா, ஸ்ரெலா, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிலா, றதீஸ், குகதீஸ், துஷாந்த் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (18-08-2004) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் R.C சேச் உடுப்பிட்டியில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ.தெலஸ்போ (பூராசா)
கணவர்

R.C சேச்,
உடுப்பிட்டி.
தொ.பே 0776 - 309870

(35369)(21-19-15)

### தர்மலிங்கம் பாலாம்பிகை (மணி)



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டு சுதந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் - பாலாம்பிகை அவர்கள் நேற்று (17-08-2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் தவசீலி, சிவசீலி, சுஜீவன், சத்தியசீலன், சிவசீலன் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2004) புதன்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5, சுதந்திரபுர சந்தி,
உடையார்கட்டு,
முல்லைத்தீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

(35375) (26-21-19-15)

### கந்தையா தங்கராஜா

(இளைப்பாறிய தலைமைச் சிறாப்பர், இலங்கை மத்தியவங்கி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு. கந்தையா தங்கராஜா நேற்று (17-08-2004) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (முன்னாள் மின் அத்தியட்சகர், இலங்கை மின்சாரசபை), ஸ்ரீகல்யாணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ந.தங்கம்மா, க.துரைசிங்கம், V.K. நடராஜா (இளைப்பாறிய துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திருமதி அன்னம்மா சபாஆனந்தர், திருமதி இரத்தினம்மா அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும் கிரிசாந்தன், நிரோஷன், தினேசா, தனஸ்ரீ, ஜீவிதன், நிருஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் அம்பலவாணர் இரத்தினசபாபதியின் சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-08-2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தங்கராஜா ஸ்ரீஸ்கந்தராஜா
(மகன்).

இணுவில் மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

(35372) (26-21-15-19)

உதயனின்

# ஒலிம்பிக் கோலாகலம்

ஏதென்ஸ் 2004


## ரஷ்யாவுக்கு 500ஆவது ஒலிம்பிக் தங்கம்

ஒலிம்பிக் போட்டிகளில் தனது 500ஆவது தங்கத்தை வென்றது ரஷ்யா. எதென்ஸ் ஒலிம்பிக் ஆடவர் துப்பாக்கி சுடுதலில் 'டிரொப்' பிரிவில் அலெக்ஸி அலிபோவ் வென்ற தங்கப்பதக்கத்தின் மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் 500 ஆவது தங்கத்தைப் பெற்றது ரஷ்யா.

1991இற்கு முன்பு வரை சோவியத் ஒன்றியமாக இருந்த போது மொத்தம் 440 தங்கங்கள் வெல்லப்பட்டன. அதன் பிறகு சிதறுண்டு ரஷ்யா தனியாகப் போட்டியிட்டு வருகின்றது. இந்நிலையில், முன்னர் வெல்லப்பட்டவற்றையும் சேர்த்து தற்போது 500 தங்கங்கள் ரஷ்யாவால் வெல்லப்பட்டுள்ளன.

அமெரிக்கா தற்போது ஒட்டுமொத்தமாக 900 தங்கங்களை வென்றுள்ளது. ஜேர்மனி 400 தங்கங்கள் பெற்று 3 ஆவது இடத்தில் உள்ளது.

ஜூடோவில் ததாஹிரோ நோமுரோ வென்ற தங்கத்தின் மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் தனது 100ஆவது தங்கப் பதக்கத்தைப் பெற்றது ஜப்பான்.



பிரான்ஸின் அன்னி லிசா டொயாவை வாள் சண்டைப் போட்டியில் வென்று காலிறுத்திக்குத் தகுதி பெற்ற மகிழ்ச்சியில் சீனாவின் ஜிவ் ஜாவ்.

## மலரும் நினைவுகள்

1932ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதிவரை அமெரிக்காவின் 'லொஸ் ஏஞ்சல்ஸில் நவீன ஒலிம்பிக்கின் 10ஆவது போட்டி இடம்பெற்றது. 14வகையான விளையாட்டுக்கள் இடம்பெற்ற இப்போட்டியில் 37 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 206 வீரர்களும் 126 வீராங்கனைகளும் கலந்துகொண்டனர். ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்கேற்கும் உலக நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் வசதியாகத் தங்கும் பொருட்டு ஒலிம்பிக் கிராமம் உருவாக்கும் நடைமுறை முதன்முதலில் இந்த ஒலிம்பிக் போட்டியின்போதே அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் நேரத்தைத் துல்லியமாகக் கணிப்பிடும் பொருட்டுத் தன்னியக்கக் கடிகாரத்தைப் பயன்படுத்தும் வழக்கமும் இம்முறையே அறிமுகமானது.

**வீயெஸ்ரி**

1936ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 16ஆம் திகதிவரை ஜேர்மனி நாட்டின் தலைநகர் பேர்லினில் 11ஆவது நவீன ஒலிம்பிக் போட்டி இடம்பெற்றது. 19 வகையான விளையாட்டுகளில் நடந்த 129 போட்டிகளில் 49 நாடுகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 632 வீரர்களும் 331 வீராங்கனைகளும் பங்குபற்றினர். அவ்வேளையில் ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி அடேல்ப் ஹிட்லரால் இந்த ஒலிம்பிக் போட்டி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டிகளின் பிறப்பிடமான கிரேக்கத்தின் ஒலிம்பியாவிலிருந்து தொடர் ஓட்டமாகப் போட்டிகள் நடைபெறும் நாட்டுக்கு ஒலிம்பிக் தீபம் எடுத்துச்செல்லப்படும் நடைமுறை முதன்முதலில் இப்பதினோராவது ஒலிம்பிக் போட்டிகளின்போதே ஆரம்பிக்கப்பட்டது. முதல் தடவையாக ரசிகர்கள் போட்டிகளைக் கண்டுகளிக்கும் வகையில் தொலைக்காட்சி ஒளிபரப்பு வசதி வழங்கப்பட்டது. அமெரிக்க கறுப்பு இனத்தவரான யெஸ் ஒவென்ஸ் என்ற வீரர் நான்கு தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தமை 11ஆவது நவீன ஒலிம்பிக் போட்டிகளின் சிறப்பு அம்சமாக அமைந்தது.

இரண்டாவது உலக மகாயுத்தம் காரணமாக முறையே 1940 மற்றும் 1944 ஆகிய ஆண்டுகளில் இடம்பெறவிருந்த 12ஆவது மற்றும் 13ஆவது நவீன ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறாதமை விளையாட்டுத்துறை ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாய் அமைந்தது.

## 3ஆவது முறையாகத் தங்கம்

ஒலிம்பிக்கில் பளு தூக்கும் போட்டியில் 'பாக்கெட் ஹெர்குலிஸ்' என்று அழைக்கப்படும் துருக்கி வீரர் ஹலில் முட்லு மூன்றாவது முறையாகத் தங்கம் வென்று சாதனை படைத்தார்.

இவர் கடந்த இரண்டு ஒலிம்பிக்குகளிலும் பளுதூக்கும் போட்டியில் தங்கம் வென்றவர். இதன்மூலம் சிறந்த சாதனை வீரர்கள் பட்டியலிலும் அவர் இடம்பிடித்தார்.

இப்போட்டியில் ஹலில் முட்லு 295 கிலோ எடையைத் தூக்கி முதலிடம் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார். சீன வீரர் ஊஹெறய்ஜின் 2ஆவது இடத்தைப்பிடித்தார்.

இதுதவிர, இப்போட்டியில் மேலும் ஒரு பரிசாக 3ஆவது இடமும் துருக்கிக்கே கிடைத்தது. 280 கிலோ எடையைத் தூக்கிய துருக்கி வீரர் செடம் ஹாக்குக் வெண்கலம் வென்றார்.

## கிரேக்கத்துக்கு முதல் தங்கம்

இம்முறை ஒலிம்பிக் போட்டியை நடத்தும் கிரேக்கம் 28 ஆவது ஒலிம்பிக்கில் முதல் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

ஆண்களுக்கான இணைந்து நீரில் குதிக்கும் போட்டியில் கிரேக்கத்தின் நிக்கலஸ் சிரனிடிஸ் மற்றும் தொமஸ் பிமிஸ்



ஜோடி தங்கம் வென்றது. இதன் மூலம் 28ஆவது ஒலிம்பிக் போட்டியை நடத்தும் கிரேக்கம், தங்க வேட்டையைத் தொடங்கியது.

## முதல் வீராங்கனை

மகளிர் 48 கிலோ ஜூடோ பிரிவில் தங்கம் வென்றார் ஜப்பானின் ரியோகோதானி.

இதன்மூலம் ஒலிம்பிக்கில் இப்பிரிவில் அடுத்தடுத்து 2தடவைகள் தங்கப் பதக்கங்களை வென்ற முதல் வீராங்கனையாக அவர் திகழ்கிறார்.

தொடர்ந்து 4ஆவது ஒலிம்பிக்கில் பங்கேற்கும் தானி, அனைத்து இறுதிப் போட்டிகளிலும் விளையாடியவர். 1992, 1996 ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றார். 2000இல் தங்கம் வென்றார்.

## ஒளிபரப்பு வருமானம்

தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு இலங்கை மதிப்பில் 14 ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1984இல் லொஸ் ஏஞ்சல்ஸில் நடந்த போட்டியில் கிடைத்த வருமானத்தைவிட இது 5மடங்கு அதிகம். போட்டி முடிவுகளைப் பார்க்க 220 நாடுகளில் ரசிகர்கள் தொலைக்காட்சிகளின் முன்தான் அமர்ந்திருக்கிறார்கள்.

மொத்தம் 3ஆயிரத்து 500 மணி நேர ஒளிபரப்பில் கிடைக்கும் வருமானத்தில் பாதி பல்வேறு நாடுகளின் ஒலிம்பிக் சபைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். 49சதவீதம் தற்போது போட்டியை நடத்தும் கிரேக்க ஒலிம்பிக் குழுவுக்கு வழங்கப்படும். லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிடைத்த வருமானமே இதுவரை கிடைத்த வருமானத்தில் அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸி. சாதனை

மகளிர்களுக்கான 100 மீற்றர் 'பிரீஸ்டைல்' தொடர் நீச்சல் போட்டியில் உலக சாதனையுடன் ஆஸ்திரேலியா தங்கம் வென்றது. கடந்த 50 ஆண்டுகளில் இரண்டாவது முறையாக இப்பிரிவில் தங்கம் வென்றுள்ளது ஆஸ்திரேலியா. இதற்கு முன்பு 1956 மெல்போர்ன் ஒலிம்பிக்கில் அந்த நாடு தங்கம் வென்றிருந்தது. ஆஸ்திரேலிய வீராங்கனைகள் இத்தொலைவை 3நிமிடம் 35.94 விநாடிகளில் கடந்து உலக சாதனை புரிந்து தங்கம் வென்றனர்.இப்போட்டியில் அமெரிக்கா 3 நிமிடம் 36.39 விநாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கத்தையே வென்றது. நெதர்லாந்து 3 நிமிடம் 37.59 விநாடிகளில் கடந்து வெண்கலம் வென்றது.

## பதக்கப் பட்டியல்
(நேற்றுப் பிற்பகல் நிலைவரம்)

| நிலை | நாடு | தங்கம | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|---|
| 01. | சீனா | 10 | 4 | 1 | 15 |
| 02. | ஆஸ்திரேலியா | 6 | 2 | 5 | 13 |
| 03. | ஜப்பான் | 5 | 1 | 1 | 7 |
| 04. | அமெரிக்கா | 3 | 5 | 5 | 13 |
| 05. | ரஷ்யா | 2 | 5 | 2 | 9 |
| 06. | பிரான்ஸ் | 2 | 2 | 3 | 7 |
| 07. | இத்தாலி | 2 | 2 | 1 | 5 |
| 08. | துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| 08. | உக்கிரைன் | 2 | 0 | 1 | 3 |
| 10. | ஜேர்மனி | 1 | 2 | 1 | 4 |
| 11. | தென்கொரியா | 1 | 1 | 2 | 4 |
| 12. | ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| 13. | தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| 14. | கிரேக்கம் | 1 | 0 | 1 | 2 |
| 15. | தென்னாபிரிக்கா | 1 | 0 | 0 | 1 |
| 16. | நெதர்லாந்து | 0 | 2 | 3 | 5 |
| 17. | கொரியா | 0 | 2 | 1 | 3 |
| 18. | போலந்து | 0 | 2 | 0 | 2 |
| 19. | ஸ்லோவாக்கியா | 0 | 1 | 1 | 2 |
| 20. | ஆஸ்திரியா | 0 | 1 | 0 | 1 |
| 20. | ஸ்பெயின் | 0 | 1 | 0 | 1 |
| 20. | பிரிட்டன் | 0 | 1 | 0 | 1 |
| 20. | ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| 20. | இந்தோனேஷியா | 0 | 1 | 0 | 1 |
| 20. | போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| 20. | செல்மொன்றி நீக்ரோ | 0 | 1 | 0 | 1 |
| 20. | சிம்பாப்வே | 0 | 1 | 0 | 1 |
| 28. | கியூபா | 0 | 0 | 3 | 3 |
| 29. | பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |
| 29. | பல்கேரியா | 0 | 0 | 2 | 2 |
| 31. | ஆர்ஜென்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| 31. | பிரேஸில் | 0 | 0 | 1 | 1 |
| 31 | கனடா | 0 | 0 | 1 | 1 |
| 31. | கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| 31. | செக்குடியரசு | 0 | 0 | 1 | 1 |
| 31. | மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |
| 31. | ருமேனியா | 0 | 0 | 1 | 1 |

SONY
சீடிலசின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்
ஏக விநியோகஸ்தர்கள்:-
SIEDLES
No.11, Stanly Road, Jaffna

எப்பிரதேசத்திலும் அன்ரனா மூலம் இயங்கக் கூடிய மொபி ரெல் இணைப்புக்கள்
IDD இணைப்புக்கள் 2,3000/=
பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
இல.185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 2227070

கணனித்துறையில் நீங்கள் ஓர் பட்டதாரியாக......
BTEC HND
"IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
Institute of Informatics Studies (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831/021 222 6933

Castrol
மோட்டார் சைக்கிள் எஞ்சின் ஒயில்
உங்கள் நெஞ்சைத் தொடும் யமஹா
ஸ்பாக் பிளக்
YAMAHA 298 KKS Road, Jaffna. 021 4590 200.

"அழகிய ஜவுளிகளின் ஆலயம்"
சிவகணேசன் றெக்ஸ்றைல்ஸ்
# 41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 222 2063

Abans
நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட....
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans

SHARP be sharp
5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு பிந்திய சேவை
பிரவுண் அன்ட் கம்பனி
89, ஸ்ரான்லி வீதி, யாழ்
021-222 5150

# உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்

எதென்ஸ் 2004

பரிசுகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன

## நீங்கள் செய்யவேண்டியது....

ஒலிம்பிக் போட்டி குறித்த கேள்வி அடங்கிய கூப்பன் உதயனில் பிரசுரமாகிறது. நீங்கள் அதனைப் பூர்த்திசெய்து 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள உதயன் பணிமனையில் நேரிலோ அல்லது தபால் மூலமோ எதிர்வரும் 24ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்சேர்ப்பிக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒலிம்பிக் கோலாகலம் எனக் குறிப்பிடவும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முதல் பரிசு யாழ். மின்னகம் வழங்கும் தொலைக்காட்சிப் பெட்டி

இரண்டாம் பரிசு பிறவுண் அன் கம்பனி வழங்கும் VCD ஸ்ரீறியோ செற்

மூன்றாம் பரிசு சொனி சிடில்ஸ் வழங்கும் 2 in 1 றேடியோ

நான்காம் பரிசு பவர் செலுலர் வழங்கும் கைத்தொலைபேசி

ஐந்தாம் பரிசு ஐ.ஐ.எஸ். வழங்கும் கலர் பிரிண்டர்

ஆறாம் பரிசு யமஹா பிளாஸா வழங்கும் மோ.சைக்கிள் உபகரணங்கள்

ஆறுதல் பரிசுகள் சிவகணேசன் ஸ்ரோர் வழங்கும் ஆயத்த ஆடைகள்

## உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்

எதென்ஸ் ஒலிம்பிக் 2004

28 ஆவது ஒலிம்பிக் போட்டியின் முடிவில் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடிக்கப்போகும் நாடு எது?........................

உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

முடிவு திகதி ஓகஸ்ட் 24

முழுப்பெயர்........................................

முகவரி ........................................

........................................

அ.அட்டை இல........................................

### விதிகள்

- ★ ஒருவர் எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம். ஆனால் போட்டோ பிரதிகள் ஏற்கப்படமாட்டா.
- ★ சிறுவர் சிறுமியர் பெற்றோரின் அடையாள அட்டை எண்களைப் பயன்படுத்தலாம்.
- ★ உதயன் மற்றும் அதன் சகோதர நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் போட்டியில் பங்கேற்கமுடியாது.
- ★ நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.
- ★ போட்டி முடிவு குறித்து எந்தவித விளக்கம் கோரல்களோ தொடர்புகளோ ஏற்கப்படமாட்டா.


## பத்தாவது பிறந்தநாள் வாழ்த்து

18.08.2004



செல்வி கவிஷனா

பிரகாஸ் - ராஜி தம்பதியினரின் செல்வப் புதல்வி

# கவிஷனா

தனது பத்தாவது பிறந்ததினத்தை இன்று 18.08.2004 புதன்கிழமை மாமாவின் இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, தங்கை தர்சனா, அம்மம்மா, ஜேர்மனியிலுள்ள பெரியமாமா குடும்பம், குட்டி மாமா குடும்பம் (ஜேர்மனி), பெரியம்மா குடும்பம் (ஜேர்மனி), மதி அக்கா, நிஷாக்கா, தயா அண்ணா (ஜேர்மனி), பெரியம்மா குடும்பம் (ஆறுகால்மடம்), மீசாலை மாமி குடும்பம், கணன் மச்சான் குடும்பம், றாயூ மச்சான் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும்பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

50, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்: அம்மா (ராஜி).

(35382) (24-12-15-26)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
இ.செந்தூரன் அவர்களது
அன்புத் தந்தையார்



அமரர் செல்லையா இரத்தினம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

4ஆம் வருட மாணவர்கள்,
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(35376) (39-12-15-26)

## கண்ணீர் அஞ்சலி



செல்லையா இரத்தினம்

(சிரான் அமைப்பின் இணைப்பாளர்)

எமது பிரதேச செயலகத்தில் பிரதேச செயலராகக் கடமையாற்றியபோது எமக்கும் மக்களுக்கும் அரும்பணியாற்றிய இரத்தினம் ஐயாவின் பிரிவு சகலருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் துயர்பகிர்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள்,
வெளிக்கள அலுவலர்கள்,
பிரதேசசெயலகம்,
வலிகாமம் மேற்கு, சங்கானை.

(சி-36786) (26-12-15)


## கனடா, லண்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு குடிபெயர, கல்விகற்க, சுற்றுப்பயணம் மேற்கொள்ள விரும்புகின்றீர்களா?

உயர்தர கல்லூரிகளில் பின்வரும் கற்கை நெறிகள்:

சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்படிப்பு

மருத்துவம் கற்கை நெறி
விற்பனையும் சந்தைப்படுத்தலும்
பொறியியல் தொழிநுட்பவியலாளன்
வியாபார நிருவாகம்
ஹோட்டல் சிற்றுண்டிச்சாலை நிருவாகம்
பி.எஸ்.ஸி (உயிரியல்/இரசாயனவியல்)
மற்றும் சகல கற்கை நெறிகளும்.

நர்சிங்
கணக்கியல் தொழிநுட்பவியலாளன்
சமயலும் சுற்றுப்பயணவியலும்
கணனி புரோக்ராமர் / வலைசர்
பி.ஏ. (தகவல்
ஆசிரியர் கற்கைநெறி

### தொழிநுட்பவியலும் கணனி புரோக்ராமும்

தொழிநுட்பவியல் முகாமைத்துவம்
நுண்ணியல் கணனி வியாபார வலைப்பின்னல்
தகவல் முறை தொழில்நுட்பம்
இன்ற்றரெக்டிவ் கேம்ஸ் டிசைன்

கணனி எனலை
வாடிக்கையாளர்
கணனி எனிமேசன் ஸ்பெஸலிஸ்ற்
வெப் வெளியீடும் சந்தைப் படுத்தலும்

- Migration Visa
- Student Visa
- Business Visa
- Investment Visa
- Dependent Visa
- Touriist Visa

கனடா, லண்டன், ஆஸ்திரேலியா நாடுகளுக்கான சட்டரீதியான பயணம் தற்போது சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கற்கை நெறிகள்:
பல்கலைக் கழக முன் கற்கைநெறி
டிப்ளோமா / பட்டப்படிப்பு கற்கைநெறி
பட்டப்பின் படிப்பு கற்கைநெறி
சான்றிதழ் கற்கைநெறி
இணைந்த பட்டப்படிப்பு கற்கைநெறி

கடந்த 7 வருடங்களாக வாழ்க்கைத்தரத்தில் 1ஆம் நிலையில் கனடா இருக்கின்றது என்பது ஐ.நாவின் கருத்து

◆ உயர் அநுபவம் ◆ அனைத்தும் ஒரே கூரையின் கீழ் ◆ துரித முன்னெடுப்பு ◆ நவீன தொழிநுட்பவசதி கொண்ட அனைத்துக்கும் இலகுவான இடம்
◆ உலகளாவிய தொடர்புகள் ◆ திறமையான கௌரவமிக்க நேர்மையான சேவை ◆ எவ்வேளையும் தொடர்பு கொள்ளலாம் ◆ ஒப்பற்றசேவை

ஐக்கிய ராஜ்ஜியம் — தகவல் தொழில்நுட்பமாவது, கல்வி தொழில் அனுமதி என்பவற்றை அத்துறையில் பயில்வோருக்கும் ஆசிரியர்கள், தாதிகள் மற்றும் ஏனையோருக்கும் வழங்குகின்றது.

இது தொடர்பான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 20-08-2004 பி.ப. 3.30 மணிக்கு Jaffna M.P.C.S. Auditorium (கேட்போர்கூடம்) 127, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத்தில் நடைபெறும். அத்துடன் யாழ். மண்ணிலிருந்து Hungaria க்கு (Europeon Country) தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விசா வழங்கலும் இடம்பெறுகின்றது.

Seminar By : T.T. PRAKALATHAN - Migration and Educational Consultant
*Member of Srilanka and Hunganian Business Council of the Ceylon Charter of Commerce*

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

# Sai International Institute and Migration (Pvt) Ltd.

கொழும்பில் தலைமை காரியாலயம்:
57A/4-2/1, Galle Road, Colombo 04.
Tel: 011-5351026 Fax : 011-5351027 Hot Line: 0777-798149
(9.30Am-4.00Pm Week Days) (10.00Am-1.00Pm Saturdays)

யாழ்ப்பாணத்தில் : MRS. A.THURAISINGAM
தொ.பே: 0777-322551
MR. MANOKAR
தொ.பே: 0777-252167

Strictly on Appointment

# துயர் பகிர்தல்

தோற்றம் 10.03.1941



மறைவு 16.08.2004

## செல்லையா இரத்தினம் அவர்கள்

(முன்னாள் பிரதேச செயலர் வேலணை. உபதலைவர் பழைய மாணவர் சங்கம் வேலணை மத்திய கல்லூரி)

எமது கல்லூரித் தாயின் பழையமாணவர் சங்கத்தின் உபதலைவராக விளங்கி கல்லூரியின் விருத்திக்கு பல்வேறு வழிகளிலும் உழைத்த பெரு மகனின் பிரிவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது

அவரைப் பிரிந்து பெருந்துயர் அடைந்த அவர் தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களை பணிகின்றோம்.

இவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/சேர் வை.து.ம.ம.வி.
(வேலணை மத்திய கல்லூரி).

(35413) (17-11-16)

# இதய அஞ்சலி

## செல்லையா இரத்தினம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*நல்லூர்.* (C/36789)(43-11-16)

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை, புளியங்கூடலைச் சேர்ந்தவரும், ஓய்வு பெற்ற வேலணை உதவி அரசாங்க அதிபரும் புளியங்கூடல் சிறுவர் நல்வாழ்வு நிலையத் தலைவருமான

## செல்லையா இரத்தினம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கிராம மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*
(35408)(43-11-16)

கிராம அபிவிருத்திச் சங்கமும்,
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்.

# கண்ணீர் அஞ்சலி



தீவக மண்ணின் மைந்தரும் தீவகம் தெற்கு (வேலணை) முன்னாள் பிரதேச செயலாளரும் சிரான் இணைப்பாளரும் சிறந்த சமய, சமூக சேவையாளரும் முன்னணி விளையாட்டு வீரரும், பன்மொழி வித்தகரும், நாட்டுப்பற்றாளருமான

## ஸ்ரீமான் செல்லையா இரத்தினம்

அவர்களின் மறைவையொட்டி நயினாதீவு மக்கள் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம். அமரரின் ஆத்மசாந்திக்காக அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் பாதமலரைப் பணிகின்றோம்.

நிர்வாகம் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை, நயினாதீவு,

(சி36793) (38-11-16)

# கண்ணீர் அஞ்சலி



தீவக மண்ணின் மைந்தரும் தீவகம் தெற்கு, வேலணை முன்னாள் பிரதேச செயலாளரும், சிரான் இணைப்பாளரும், சிறந்த சமய, சமூக, மக்கள் சேவையாளரும், முன்னணி விளையாட்டு வீரரும் பன்மொழி வித்தகரும், எமது பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் திரு. குலசேகரம்பிள்ளை கருணாநிதி அவர்களின் பாசமிகு மாமனாருமாகிய

## ஸ்ரீமான் செல்லையா இரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி துயர சாகரத்தில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் நாமும் இணைந்து கொள்வதுடன் அமரரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி
நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம்,
தீவகம் தெற்கு, வேலணை.

(C/36794)(43-11-16)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சித்திரப்பாடபகுதிநேர ஆசிரியர் திரு. கிருஷ்ணபிள்ளை விஜயகுமார் அவர்களது அன்புத் தாயார்



திருமதி

## கிருஷ்ணபிள்ளை தெய்வானை

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின் றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,
கரவெட்டி. (சி36790) (38-11-16)

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள்
மாணவர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் கி.மகேஸ்வரன அவர்களின் அன்புத் தந்தை கதிரன் கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் 19.07.2004 அன்று காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின்
உறுப்பினர்கள், யாழ்ப்பாணம்.

(35409) (38-11-16)

# திருமண வாழ்த்து

இன்று (18.08.2004) புதன்கிழமை
*திருமணத்தில் இணையும்*

**டிலான் ஜீவனி**

மணமக்களை மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

9/6, புது வீதி,
கொய்யாத்தோட்டம்.
(35421)

J.கிறிஸ்ரி – தேவி
தம்பதிகள்.


# பொருளியற் கல்லூரி

(இணுவில் மத்தியகல்லூரி அருகில்)
K.K.S. றோட் - இணுவில்

A/L DAY CLASS

நடைபெறுகின்றன.

திங்கள், புதன், வெள்ளி (ப.நே.)

| | | |
|---|---|---|
| தமிழ் | - பாலா | 7-8 |
| இந்துநாகரிகம் | - சுரேஸ் | 8-9 |
| அளவையியல் | - ஜெயசுரேஸ் | 9-10 |
| புவியியல் | - குமரன் | 10-11 |
| நாட.- அரங். | - சுதன் | 11-12 |

குறிப்பு:-
புதிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும் A/L DAY CLASS வர்த்தகப் பிரிவு வழமையான நேரப்படி நடைபெறுகின்றன.

(35416)

# ராஜா யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
கமலஹாசன். பிரபு. சிநேகா நடித்த

**வசூல்ராஜா M.B.B.S**

புதியநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்.

# நாகம்ஸ் சுன்னாகம்

சியாம், திரிஷா, மாதவன்,
விவேக் நடித்த

**லேசா லேசா**

காட்சிகள்:
11.00, 3.00,
7.00 (புநே.)

வெள்ளி முதல

**அன்புச் சகோதரர்கள்**

(C/36415) (12)

# நிரஞ்சனாஸ் சங்கானை

அரவிந், சோனா, ரகுவரன் நடித்த

**கையோடு கை**

தினசரி
11.00, 2.45, 6.00 (புநே)
வெள்ளி, சனி, ஞாயிறு.
ROAD TRIP [இரவு 8.45 பு.நே.]

(சி-36305)

# நல்லூர் சயன்ஸ் அக்கடமி

★ தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு 2005 ★

இந்த வகுப்பிற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான அனுமதிப்பரீட்சை
03-09-2004 (வெள்ளி) பி.ப. 4 மணி.
☆ [ஒரு வகுப்பில் 50 மாணவர்கள் மட்டும்]

★ வாராந்தப் பரீட்சை, விசேட வழிகாட்டல்

- திரு.கணேசலிங்கம் (*Bed Hons, I.S.A*)
- திரு. பகீர் (*விசேட ஆசிரியர்*)
- செல்வி கவிதா (*B.A. Hons*)
- செல்வி சசிகலா (*B.A. Hons*)

★ தனியே ஆங்கிலத்தில் கற்றல் [தமிழ் பேசாது ஆங்கில மொழியில் மட்டும் உரையாடிக் கற்றல்]
தரம்: 6,7,8 கீழ்ப்பிரிவு தரம்: 9,10,11 மேற் பிரிவு. இந்தவகுப்பிற்கான அனுமதிப் பரீட்சை
03-09-2004 (வெள்ளி) பி.ப. 4 மணி.
☆ [ஒரு வகுப்பில் 50 மாணவர்கள் மட்டும்]

★ O/L வினாவிடை வகுப்பு - 2004
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்.
☆ ஆரம்பம்: 01-09-2004 (புதன்) காலை 6.30.

அனைத்திற்கும் இன்றுமுதல் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

[ நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக ]

(35411)(15-11-12)


# மரண அறிவித்தல்

திருமதி

## நல்லம்மா இராசையா

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 99, செம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி நல்லம்மா இராசையா நேற்று (17.08.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலு-சின்னம்மாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பண்டிதர் க.இராசையாவின் அன்பு மனைவியும் இராசமலர், காந்திமலர், வசந்தமலர், மதியழகன், பண்பழகன், அருளழகன், தமிழழகன், கலையழகன், கானமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகரட்ணம், அருட்சிவம், ஜெகசீலன், நாகேஸ்வரி, இந்துமதி, பஞ்சரத்தினம், நாகேஸ்வரி, துஷ்யந்தி, கலைக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.99, செம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (35412)(43-11-16)

தகவல்
குடும்பத்தினர்.

# யோகிராஜ் நினைவு தினம்

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா சமாதி அடைந்த இரண்டாவது வருட நிகழ்வு நாளை மாலை 5.30 மணிக்கு யாழ்.திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. திருப்பூசை, பஜனையுடன், 'ஆர்ஷ வித்ய' குரு குலத்தைச் சேர்ந்தவரும் ஸ்வாமி தயானந்த சாஸ்திரியின் சீடருமான சுவாமி யோகேசானந்தர் கலந்து கொள்ளவுள்ளார்.


## வீடு வாடகைக்கு

138, கனகரத்தினம் வீதி, யாழ்ப்பாணத்தில் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் குளியலறைகள் இணைக்கப்பட்ட ஆறு படுக்கை அறைகளுடன் கூடிய புதிய மாடி வீடொன்று வாடகைக்கு உள்ளது. பத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் தரிக்கக் கூடிய இடவசதி உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்றது. நேரில் அல்லது தொலைபேசி மூலமாக தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இலக்கம்: 0777-062005 (35386)


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா இரத்தினம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் 230A, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் வேலணை, சங்கானை பிரதேச செயலரும் தற்போதைய யாழ். மாவட்ட சிரான் (Sihrn) இணைப்பாளருமாகிய செல்லையா இரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (16.08.2004) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - கண்ணம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற முத்துத்தம்பி-சிவயோகம் தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சுந்தையா, விஸ்வலிங்கம் ஆகியோரின் சகோதரரும் லலிதா (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), கவிதா (ஆசிரியை, வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), யசோதா (லண்டன்), செந்தூரன் (4ஆம் வருடம் விஞ்ஞான பீடம் யாழ்.பல்கலைக்கழகம்), செந்தில்மாறன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் லிங்கேஸ்வரன் (ஆசிரியர், விகனேஸ்வரா வித்தியாசாலை புத்தூர்), கருணாநிதி (முகாமைத்துவப் பணிப்பாளர் - பிரதேச செயலகம் வேலணை), ஜெயக்குமார் (பொறியியலாளர், லண்டன்), வைஸ்ணவி, சேந்தன் ஆகியோரின் பேரனும் சண்முகராசா (ஹோம் நீட்ஸ், காலி), மகேந்திரன் (அதிபா, யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) மகேஸ்வரி, செல்வராசா (முத்துத்தம்பி அன் சன்ஸ், காலி), நாகேஸ்வரி, யோகராசா (அம்பாள் றேடர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் திருச்செல்வம் (பேராசிரியர், பேராதனைப் பல்கலைக் கழகம்), மகேந்திரலிங்கம் (துளசி றேடர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2004) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*230A நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.: 021 222 3298* (35415)(43-11-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லையா காசிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)



கலைநகர், வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன் கேணியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா அவர்களின் புதல்வருமான செ.காசிப்பிள்ளை (ஆசிரியர்) அவர்கள் நேற்று (17.08.2004) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வநாயகி (ஆங்கில ஆசிரியை)யின் அன்புக் கணவரும் குகநாயகி, தேவசேனா, அகிலாண்டேஸ்வரி (பலாலி ஆசிரியர் கலாசாலை 2ஆம் வருடம்), குமரநாயகி (பிரான்ஸ்), சியாமளா (பல் வைத்தியகலாநிதி, போதனாவைத்தியசாலை, மட்டக்களப்பு) அருள்ஜோதி (பிரான்ஸ்), சிவபாலன் (பிரான்ஸ்), மணிவல்லி (பிரான்ஸ்), காலஞ்சென்ற இளவழகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பரமநாதர் மற்றும் யோகநாதர் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), காலஞ் சென்ற வடிவேல்தாசன், மகாராஜா (பிரான்ஸ்), தேவஞானன் (கணக்காய்வு அத்தியட்சகர்), சரவணபவானந்தன் (பிரான்ஸ்), குமுதா (இந்தியா), சிறிபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைநகர்,*
*சித்தன்கேணி.* (35407)(43-11-16)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## திருமதி நடராசா மங்கையர்க்கரசி

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா மங்கையர்க்கரசி நேற்று செவ்வாய்க்கிழமை (17.08.2004) காலை 10.30மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியும் அமரர்களான கு.ஆ.சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளையின் மகளும் வே.ஆ.சிதம்பரப்பிள்ளை - இராசம்மாவின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மகாதேவன்பிள்ளை, கமலாதேவி மற்றும் வடிவாம்பிகை, வாசுதேவன் ஆகியோரது அன்புச் சகோதரியும் தையல்நாயகி, காந்திமதி, காமாட்சி, செல்லக்கண்டு, காலஞ்சென்ற முருகேசுவின் மைத்துனியும் தேவாம்பிகை, இராமச்சந்திரன், பாலச்சந்திரன், நீலாம்பிகை, வேதாம்பிகை, செல்வச்சந்திரன், விமலச்சந்திரன், யசோதாம்பிகை ஆகியோரின் பாசமிகு தாயாரும் காசி விசுவநாதர், அம்புஜம், சர்வேஸ்வரி, கோபாலசிங்கம், கண்ணபிரான், நளாயினி, சுவேந்தினி, திருக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வள்ளி, சிவபிரான், வஞ்சி, அபிராம், அமலன், ஜனார்த்தனி, துஷ்யந்தினி, ராதிகா, சுரேகா, பாலகுமார், பாரதி, ஹரிகரன், கிரிகரன், டூஷான், ஹரன், கிசான், தீபா, வைஷ்ணவி, விபூசன் ஆகியோரின் பாட்டியும் கிருஷானி, கிருஷ்ணி, தினு, கயிலி, கிரண், பவன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது மகன் பாலச்சந்திரனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.76 பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (35404)(43-11-16)

தகவல்:
பிள்ளைகள்.

## உடவத்தைகெலவில் இரு தமிழர் கைது

கண்டி,ஓக.18

கண்டியில் உள்ள உடவத்தைகெல எனும் காட்டுப் பிரதேசத்தில் நடமாடிய இரண்டு தமிழ இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் இராணுவத் தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கண்டி தலதா மாளிகைக்கருகில் மகுல் மடுவ எனப்படும் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மல்வத்தைப்பீட புதிய மகாநாயகருக்கான நியமனப்பத்திரம் வழங்கும் வைபவம் நடந்து கொண்டிருந்த சமயமே இவ்விளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த வைபத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கைதுசெய்யப்பட்டவர்களில ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் கனடாவில் வசிப்பவர் என்றும் தெரி விக்கப்படுகிறது.

இவர்கள் கண்டி பொலீஸாரிடம் ஒப்படைக் கப்பட்டனர். பொலீஸார் மேலதிக விசார ணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ)

## வவுனியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பராமிகுலதுங்க பதவியேற்க இருக்கிறார்.

இதேவேளை, போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் வவுனியா அலுவலகத் தலைவ ராக இருந்த யோகான் தனது பதவிக்காலம் முடிவடைந்து செல்லவுள்ளார்.

## ஜிக்கி காலமானார்

தமிழ்த் திரைப்பட பின்னணிப் பாடகி ஜிக்கி புற்று நோயினால் நேற்று முன்தினம் தனது 70ஆவது வயதில் காலமானார். காலஞ்சென்ற பிரபல பின்னணிப் பாடகர் ஏ.எம்.ராஜாவின் மனைவியான இவர் "கல்யாணம் ஊர்வலம் வரும்", "மயக்கும் மாலைபொழுதே நீ போ" போன்ற புகழ்பெற்ற பாடல்கள் உட்பட, சுமார் 10 ஆயிரம் வரையிலான பாடல்களை இது வரை பாடியுள்ளார்.

## இரு இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபரைக்கொலை செய்தார்கள் என்ற குற்றம நிருபணமானதனாலேயே இருவரும் தூக்கிலிடப பட்டனர். கொல்லப்பட்ட ராஜா இலங்கையில் பிறந்து, கனடா குடியுரிமை பெற்றவராவார்.

தடைசெய்யப்பட்ட மதுபானம் குவைத்துக்குள கடத்திச்செல்லப்பட்டுள்ளது. இதுதொடர்பில் ராஜா விடம் பணம் கோரப்பட்டுள்ளது. கேட்ட தொகை யைக் கொடுக்க அவர் மறுத்துள்ளார். இதனால் அவர் பாலைவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் 1995 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

## அருமை கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பெற்றுக்கொண்டார்.

மூத்த தளபதியும் தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான ச.பொட்டு அம்மான் சிறப்புரை யாற்றினார். கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் மூத்த தளபதிகளான கேணல் சூசை, கேணல் பால்ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-4)



காலஞ்சென்ற நாட்டுப்பற்றாளர் செ.இரத்தினத்தின் பூதவுடலுக்கு நேற்றுக் கிளிநொச்சியில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அஞ்சலி செலுத்துகிறார்.

## மட்டுவிலில் ஒரு வீட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் பாரிய குழி ஒன்று காணப்பட்டது. அதற்குள் வெடிபொருள்கள் இருந்தன.

இது குறித்து அருகிலுள்ள படையினருக் குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனைய டுத்து அங்கு வந்த படையினர் அவ் வீட்டைப் பார்வையிட்டதுடன் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் அதற்குள் எவரையும் செல்ல விடாது தமது பாதுகாப்பில் வைத்திருந்தனர்.

மிதிவெடி அகற்றிவரும் 'ஹலோடிரஸ்ட்' நிறு வனப் பணியாளர்கள் நேற்று அங்குவந்து வெடி பொருள்களை மீட்டுச் செயலிழக்கச் செய்தனர்.

கிரனெட்டுக்கள், மிதிவெடிகள, கிளைமோர், கண்ணிவெடிகள் என்பன அங்கிருந்து மீட்கப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4-31-117)


**A/L 2005 Day Class**

ACC. திரு.பாலவாசன் (12.00-2.00)

ECO. திரு.மோகன் (8.30-10.00)

B.St. திரு.யசோ (11.00-12.00)

Mon., Tue., Wed., Thu., Fri.

ஆரம்பம் 19.08.2004 Thu.

BEACON

வெலிங்டன் சந்தியருகில்

(35365)(38-11-16)

**D.C.A**

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் B.A. FINAL, 1st in Com, 1st in Arts

சனி, ஞாயிறு 8.30 மணி.

விவரங்களுக்கு D.C.A (DMI)

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(35337)(38-11-16)

எம்முடன் இணைவோர் நிச்சயம் உயர்கல்வி பெறுவர்

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

பிரிவு 2 — A/L DAY CLASS — ஆரம்பம்: 20.08.2004 7 மணி

கலை, வர்த்தக வகுப்புகள்

| | |
|---|---|
| Acc. திரு.பாலவாசன் | Eco. திரு.உதயன் |
| B.St. திரு.யசோ | Log. திரு.சயந்தன் |
| Tam. திரு.குழந்தை | H/C. திரு.பத்மராஜா |
| Geo. திரு.பாபு | Hin. திரு.N.T.தரன் |
| Hist. திரு.சுதன் | P/Sc. திரு.றொபின்சன் |
| Chri. திரு.வசந்தன் | Drama திரு.மதி |

★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(35387)(38-11-16)


## கண்ணீர் அஞ்சலி

### செல்லையா இரத்தினம்



பிறப்பு 10 08 1941 — இறப்பு 16 08 2004

அன்புக்கோர் அணிகலமாய் பண்புக் கோர் இருப்பிடமாய்த் திகழ்ந்த முன்னாள் வேலணை, சங்கானை பிரதேச செயலரும் சிரான் (SIHRAN) அமைப்பின் இணைப்பா ளராக பணியாற்றிய அமரர் செல்லையா இரத்தினம் அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த துயரத்திற்குள்ளாக்கியுள்ளது. அமர ருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை சமர்ப்பிக்கின்றோம். அன் னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளை தந்துவிட்டு நிலையான வாழ்வு தேடி நீங்கிச் சென்றீரே நண்பா! உனது நினைவுகள் என் உயிருள்ளவரை நீங்காது.

139, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (35368)(38-11-16)

உன்பிரிவால் துயருறும் நண்பன் த.தெட்சணாமூர்த்தியும், குடும்பத்தினரும்


**CHEMISTRY** Group Classes

DIAS B.Sc. (Hons) Spl.Che.

Theory, Paper Classes

104/4, குறுக்கு வீதி, அத்தியடி

(35102)(38-11-16)

**PERSONAL CLASS**

PHYSICS A/L Day Class

ஆரம்பம்: 20.08.2004 வெள்ளி 6.30 p.m.

ஆசிரியர் திரு.ம.ஸ்பெல்மன்

இடம்: No.18, மத்தியூஸ் வீதி, யாழ்.

(35395)(38-11-16)

**வின் கல்வி நிலையம்** WIC

இல.34, கோவில் வீதி.

A/L 2005 DAY CLASS அலகுரீதியாக GROUP CLASSES ஆரம்பம்

(சிறந்த பெறுபேறு பெற்றோருக்கு வாழ்த்துக்கள்)

GR 10 &O/L 3 ஆம் தவணை ஆரம்பம்.

(35362)(38-11-16)

**LOGIC**

A/L DAY CLASS

ஆரம்பமாகிவிட்டது.

R.S.சந்திரன்

கிறிஸ்ரல், நெல்லியடி

(35328)(38-11-16)


## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் குமாரசாமி

(உத்தியோகத்தர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை வவுனியா)



கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிட மாகவும் 57, புதுச்சிவன் வீதி, நல்லூரை வசிப் பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குமாரசாமி நேற்று (17.08.2004) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் இரத்தினத்தின் அன்பு மகனும் வசந்தியின் அன்புக் கணவரும் நிவே திகா, கபிலன் ஆகியோரின் அன்புத் தந்தை யும் காலஞ்சென்ற குணசேகரம் தங்கமலர், புவனேஸ்வரி, கமலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது நல்லூர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு இன்று (18-08-2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம், கோண்டாவில். (35418)(38-11-16)

தகவல் த.ராதா (மைத்துனர்) 021 222 5845

### இராசர் லில்லிரத்தினம்

வடமூலை, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசர் லில்லிரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசர் - இராசம்மாவின் மகளும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் பேரின்பநாயகம், செபரட்ணம், மரியரட்ணம் ஆகியோரின் சகோதரியும், மேரிதிரேசா, மரியதாஸ், மரியராணி, யசிந்தா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

இவரின் இறுதி ஆராதனை இன்று (18-08-2004) புதன்கிழமை மாலை 3 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, அச்சக வீதி, சுண்டுக்குளி. (35422)(38-11-16)

தகவல் யோசேப் நவரட்ணம்.

### [illegible] அழைப்பிதழ்

அன்புடையீர்!

08-08-2004 அன்று சிவபதமடைந்த ஸ்ரீமதி செல்வமதி நித்தியானந்தக்குருக்கள் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் 18.08.2004 புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு கல்வியங்காடு கலை மகள் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தி லும் 19-08-2004 வியாழக்கிழமை பகல் 11.00 மணிக்கு மண்கும்பான் முருகன் கோயிலிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ் வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

கலைமகள் வீதி, கல்வியங்காடு.

சிவஸ்ரீ ச.நித்தியானந்தக் குருக்களும், பிள்ளைகளும்.

(35419)(38-11-16)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா ஐயர் கிருஷ்ணமூர்த்தி சர்மா

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிட மாகக்கொண்ட பொன்னையா ஐயர் கிருஷ்ணமூர்த்தி சர்மா அவர் கள் (16-08-2004) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துள்ளார். அன் னார் காலஞ்சென்ற இராசலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீதரசர்மா, கிருஷ்ணகுமாரசர்மா, ஸ்ரீகரசர்மா, வடிவாம்பிகை, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிர மணிய ஐயா, இராஜாயிக் குருக்களின் மைத்துனரும். ராமச் சந்திரக்குருக்கள், நடேசசர்மா, கணேசசர்மா ராஜேஸ்வரி அம்மா, பத்மாவதி அம்மா, நாகரத்தின அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-08-2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கநாயகி அம்மன் கோயிலடி, கல்வியங்காடு. (35417)(38-11-16)

தகவல் பிள்ளைகள், மருமக்கள்

### திருமதி சந்திரகாந்தி இராஜகுலேந்திரன்

கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைச் சேர்ந்தவரும் தெல் லிப்பழை, மகாஜனக்கல்லூரி பிரதி அதிபர் இராஜகுலேந்திரனின் அன்புத் துணைவியாருமாகிய திருமதி சந்திரகாந்தி இராஜகுலேந்திரன் அவர்கள் நேற்று (17-08-2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் இராஜகாந் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), இராஜசந்திரிகா (கனடா), இரஜனிகாந்தன் (HNDA மாண வன், 3 ஆம் வருடம்), இராஜகாந்தி (மாணவி, மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரது அன்புத் தாயாரும், யோகராஜா (ஓய்வு பெற்ற மருந்தாளர்- ஆதித்தா மருந்தகம்), ஸ்ரீபாலன் (கனடா), சந் திரகுமாரி, சந்திரவதனா, மதிவதனா (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (35423)(38)

தகவல் செ.இராஜகுலேந்திரன் (கணவர்)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.